Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ் நகரில்
பாடசாலை மாணவர்களுக்கும்,
அலுவலக
உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்ற
SILVER SHIELD SOCKS
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் T.P: 222 5392

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 07 (24.08.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:326

# ஆயுதக் குழுக்களுக்கு இராணுவத்தினர் புகலிடம்; போர்நிறுத்த உடன்பாட்டுக்குப் பாரிய அச்சுறுத்தல்!

## கண்காணிப்புக் குழுவுக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

[கிளிநொச்சி]



***ஆயுதக் குழுக்களுக்குப் புகலிடம் கொடுத்து அவர்களின் நடவடிக்கைக்கு இலங்கை இராணுவத்தினர் ஊக்கமளித்துவருவது – இயல்பு நிலைக்கும் போர் நிறுத்தத்தைக் கடைப் பிடிப்பதற்கும் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்திமிருப்பதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறாவ் ஹெவ்டேக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.***

விடுதலைப் புலிகள் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் பாவா மற்றும் மட்டு அம்பாறை அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான இணைப்பாளர் யோகா ஆகியோர் வாகரையில் நடந்த யுனிசெப் கருத்தரங்கு ஒன்றில் பங்குபற்றிவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தனர்.

இவர்களுடன் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் மற்றும் இரண்டு பெண் போராளிகளும் மோட்டார் சைக்கிளில் வாழைச்சேனைக்கு திரும்பிக்கொண்டிருந்தபோது, இராணுவச் சோதனைச் சாவடிக்கு அருகில் வைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டு துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இராணுவ சோதனைச் சாவடியில் தமது பெயர்களை பதிந்துவிட்டு இவர்கள் திரும்பும்போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## தொடரும் தாக்குதல் குறித்து
## தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்த ஹெவ்டே கிளிநொச்சி வருகிறார்!

(கிளிநொச்சி)

கிழக்கில் விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல் சம்பவங்கள் குறித்து, இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் புறாவ் ஹெவ்டே நாளை கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நாளை காலை 10.30 மணிக்கு இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, விடுதலைப் புலிப் போராளிகள் மீது இராணுவத்தினரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல் சம்பவங்கள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகள் மீதான இவ்வாறான தாக்குதல் சம்பவங்களை (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி வவுனியா,மன்னாருக்கு நேற்று விஜயம்!
### பாதுகாப்பு நிலைகளை நேரில் ஆராய்வு

(வவுனியா)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க நேற்று வவுனியா மற்றும் மன்னார் பகுதிகளிலுள்ள படை முகாம்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன் இராணுவத்தினர் மத்தியில் உரை நிகழ்த்தினார்.

விமானப் படையினரின் ஹெலிகொப்ரர் மூலம் வவுனியா சென்ற அமைச்சர் ஜோசப் முகாமின் படை அதிகாரிகள் மற்றும் படையினர் மத்தியில் உரையாற்றினார்.அங்கு அவர்-

போர் நிறுத்த ஒப்பந்தத்தை பாதுகாப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் நேர்மையாக உழைக்க வேண்டும். (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் கிடைத்தன!

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகளை பொருத்தமான அரச துறைகளில் வேலைக்கு இணைத்துக்கொள்ளும் பொருட்டு முதல் கட்டத் தெரிவில் பெயர் வெளியாகிய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முதல் கிடைக்கத் தொடங்கியுள்ளது.

அந்த நியமனங்க்கடிதத்தில் செப்டம்பர் 2 ஆம் திகதி யாழ்.வேம்படி உயர்தரப் பெண்கள் பாடசாலைக்கு சமூகமளிக்குமாறும் அங்கு இவர்களுக்கான பயிற்சிகள் பற்றி அறிவிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## காயங்கேணி துப்பாக்கிச் சூட்டில் இராணுவ சிப்பாய் ஒருவர் காயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை, காயங்கேணிப் பகுதியில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் ரோந்துசென்ற இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

வீதி ரோந்தில் ஈடுபட்ட படையினர் மீது தாக்குதல் நடத்தியவர்கள் இதுவரை இனங் காணப்படவில்லை என்று இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த இராணுவச் சிப்பாயான காலியைச் சேர்ந்த சமன்குமார, பொலநறுவ (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துடன் தொடர்புடையவர் வெள்ளவத்தையில் சுட்டுக்கொலை!
### நேற்றிரவு சம்பவம்

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுத்துறையுடன் தொடர்புடையவரெனக் கூறப்படும் நபர் ஒருவர் வெள்ளவத்தை அரவிந்தர் ஆசிரமத்தில் வைத்து நேற்றிரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சுப்பையா குகானந்தன் (வயது 47) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

நேற்றிரவு 9.45 மணிக்கு வெள்ளவத்தை ஈ.ஏ.பி.குரே மாவத்தையில் உள்ள அரவிந்தர் ஆசிரமத்தில் காவல் கடமையிலிருந்தபோது அங்குசென்ற இனந்தெரியாத ஆயுதக் குழுவினர் இவரை சுட்டுவிட்டு தப்பிச்சென்றனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்பட்டு வந்த இவர் சிறிது காலத்துக்கு முன்னர் விலகி வெள்ளவத்தையில் உள்ள ஆசிரமத்தில் காவலாளியாக இணைந்து செயற்பட்டதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர், (01)

## மட்டக்களப்புச் சம்பவங்கள் போர்நிறுத்தத்தை பாதிக்காது
### ஜப்பானிய தூதுவர் அக்கியோ சூடா தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது இடம்பெற்று வரும் சம்பவங்கள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பாதிக்காது என்று இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அக்கியோ சூடா தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு நேற்று மாலை விஜயம் மேற்கொண்ட ஜப்பானிய தூதுவர் முதலில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் மட்டக்களப்புக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் சமரதிவாகரவும் கலந்து கொண்டார்.

இதன் பின் ஜப்பானிய தூதுவர் ஊடகவியலாளரை சந்தித்து - மட்டக்களப்பில் புதிய அபிவிருத்தியை ஆரம்பிப்பது தொடர்பாக ஜப்பான் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

## சிதம்பரபுரம் காட்டுப் பகுதியில் இரு எலும்புக் கூடுகள் மீட்பு !

(வவுனியா)

வவுனியா சிதம்பரபுரம் பகுதியிலுள்ள எல்லையோர காட்டுப் பகுதியிலிருந்து இரண்டுமனித எலும்புக் கூடுகள் மற்றும் எரிந்த நிலையில் கிடந்த ஆடை என்பன நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டன.

நேற்றுக்காலை இப்பகுதிக்கு சென்ற பொதுமக்கள் இந்த இரண்டு எலும்புக்கூடுகளையும் கண்டு பொலிஸாருக்கு கொடுத்த தகவலையடுத்தே இந்த எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன.

நேற்றுக் காலை சுமார் 9.30 மணியளவில் எலும்புக்கூடுகள் கிடந்த பகுதிக்கு சென்ற வவுனியாப் பொலிஸார் மற்றும் மாவட்ட நீதிபதி இளஞ்செழியன் ஆகியோர் இரு எலும்புக்கூடுகளையும் பார்வையிட்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் ... விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு ... 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் ஆலயச் சூழலில்

# கடமையில் ஈடுபட்டுள்ள பொதுப்பணியாளர்களுக்கு அடியார்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்!

## உற்சவ ஏற்பாட்டுக்குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயச் சூழலில் கடமையில் ஈடுபட்டுள்ள பொதுப்பணியாளர்களுக்கு பக்தர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென நல்லூர் ஆலய உற்சவகாலப் பணிமனையினர் கேட்டுள்ளனர்.

இது குறித்து அவர்கள் தெரிவித்துள்ளதாவது -

நல்லூர் ஆலயச் சூழலில் யாழ். மாநகரசபைத் தொண்டர்கள், சாரணத்தொண்டர்கள், மக்கள் நலன் புரிச்சங்கத்தினர், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் எனப் பல்வேறு தொண்டர்களும் பக்தர்களின் நலன்களைப் பேணும் பொருட்டும், அவர்களின் அசௌகரியங்களைத் தடுக்கும் பொருட்டும் சேவையாற்றி வருகின்றனர்.

அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும். அவர்களுடன் முரண்படாது, அவர்கள் பணியைச் செய்வதற்கு உதவுதல் வேண்டும். அப்போதுதான் ஆலயத் திருவிழாவைச் சிறப்பாக நடத்த முடியும்.

அதேவேளை, தொண்டர்களும் தமக்கு வழங்கப்பட்ட பணியைச் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். அதனைவிடுத்து எந்தவொரு வீண் வேலைகளிலும் ஈடுபடக்கூடாது. அவர்களது கடமைகள் சரியான முறையில் நடைபெறுகின்றமையை அவர்களுக்குப் பொறுப்பானவர்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். (ப)

# உளசமூக செயற்குழுவுக்கு இன்று விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

குடும்ப புனர்வாழ்வு நிலையம், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்துடன் இணைந்து நடாத்தும் மிதிவெடியினால் பாதிப்புற்றோருக்கான சமூகப்புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ், உள சமூக செயற்குழு (வலைப்பின்னல்) விற்கான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்னேஸ்வரன் தலைமையில்,யாழ் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறுகிறது

எனவே - அழைக்கப்பட்ட அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளும்படி எஸ்.சிதம்பரநாதன் தெரிவித்தார்.

### மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள்

நாவற்குழி மகா வித்தியாலய மாணவன் குலேந்திரன் மேகலனின் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டி, நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த மரதன் ஓட்டப் போட்டியில் நாவற்குழியைச் சேர்ந்தவர்களான ஏகாம்பரம் ஜெயரூபன் முதலாம் இடத்தையும், தம்பிராசா கஜானா இரண்டாம் இடத்தையும், ஞானசேகரம் வனுஜன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். (31)

### ஏகாதசி விரதம்

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் ஏகாதசி விரத பூசையும், மறுநாள் வரலட்சுமி விரத பூசையும் பக்திபூர்வமாக நடத்தப்படவிருக்கிறது.

விசேட அபிஷேக ஆராதனையுடன் பூசைகள் நிறைவேற்றப்பட்டு இறுதியாக ஸ்ரீமத் நாராயணர் வரலட்சுமி சகிதம் வீதியுலா எழுந்தருள்வார். (206)

### செல்வச்சந்நிதியில் தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு . சந்நிதியான் ஆசிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆசிரம மண்டபத்தில் கொடியேற்றம் முதல் தொடர்ந்து நடைபெற்று வரும் கலைநிகழ்ச்சித் தொடரில் இன்று 'நெஞ்சக்கனகல்' என்னும் தலைப்பில் செஞ்சொற் செல்வர் இரா.செல்வவடிவேல் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

## ஓராண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 01 - 10 - 1939

மறைவு 06 - 08 - 2003

அமரர்

**திருமதி தியாகராசா பாக்கியம்**

(பலகாடு. காரைநகர்)

கண்கண்ட தெய்வமாய் காவல் நின்று கண்ணியமாய்
வாழவைத்த எம் இனிய அம்மாவே.
எம் இல்லறம் நிறைந்த உத்தமியே.
எங்கள் குல விளக்கே.
பாசத்திற்கு இனிய அமுதே அம்மாவே.
கண் உறங்கும்போது உங்கள் நினைவுகள்
அலைமோதுகின்றன.
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் ஆறுதலுக்கு நீங்கள்
அருகில் இருப்பது போல் தோன்றுகின்றதே. விண் உலகம்
சென்றாலும்
எம்மை இன்புறுவ வாழ்த்துவீரே.
நூறு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு நீங்காது.

இல 87,
சிவலிங்கப் புளியடி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


திறப்பு விழா

M.G.M உற்பத்திப் பொருட்களின் ஏக விநியோகஸ்தர்களான

முகமது கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ்

இல.777, கே.கே.எஸ். வீதியில் மீண்டும்
தங்களுடைய வியாபாரத்தை ஆரம்பித்து விட்டார்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள்

ஆட்டா மா, வறுத்த சிவப்பு அரிசி மா, வறுத்த வெள்ளை அரிசி மா, வெள்ளை அரிசி மா, கடலை மா, குரக்கன் மா, உழுந்து மா, கோதுமை குறுணல்

ரோஸ் ரசம், நன்னாரி ரசம், நெல்லி ரசம், கிறேப் சர்பத், பஷன் ரசம், மிக்ஸ் புரூட் ரசம், அன்னாசி ரசம், தேசிக்காய் ரசம்

நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், ஒலிவ்வெண்ணெய்

வினாகிரி, அயடீன் உப்பு, ஐசிங் சீனி, பேக்கிங் பவுடர், அப்பச்சோடா, கொக்கோ பவுடர், சிற்றிக் அசிட்.

தேசிக்காய் ஊறுகாய், வெள்ளைப் படு ஊறுகாய், மோர் மிளகாய்

வெள்ளைப் பிட்டுக் கலவை, சிவப்புப் பிட்டுக் கலவை, திடீர் தோசைக் கலவை, திடீர் அப்பக் கலவை

சீயாக்காய் பவுடர்

பிளீச்சிங் பவுடர்

ஆகியவற்றை
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

M.G.M. T.P :- 0777 741195
0777 741295


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

# அமரர் பரமசிவம் றஜீவன்

(சின்னாம்பி)



தோற்றம் 19 - 11 - 1982

மறைவு 11 - 07 - 2004

சின்னாம்பி....!
ஒரு மரத்துப் பறவைகள் போல்
பாடிப் பறந்து திரிந்தோமடா..
காலனவன் கடுகதியில் உன்னை
பாதியிலே பரலோகம் அழைத்ததனால்,
பண்பட்ட எம் நெஞ்சமெல்லாம்
புண்பட்டுப் போனதடா....!
காலங்கள் மறைந்து விட்டாலும்
எம்மில் உறைந்து விட்ட நீயும்
நிறைந்துவிட்ட உன் நினைவும்
ஒருபோதும்
குறைந்துவிட மாட்டாதடா...!

கே.கே.எஸ் றோட்,
சுன்னாகம்.

'வாணி விலாஸ்'
உரிமையாளர் (பவா).
ஊழியர்கள்.

(சீ/2994)


திறைஞ்சனல் சங்கானை

இன்று முதல் ரஜனி, சௌந்தர்யா, சிவாஜி, மற்றும் ரம்யாகிருஷ்ணன் நடித்த

படையப்பா

காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

Strike Force

(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், மீனா, சுவாதி நடிப்பில்

அன்பு சகோதரன்

நாளை முதல் ஷாக்

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

(சி-2904)

ராஜா யாழ்ப்பாணம்.

வசூல்ராஜா MBBS

விரைவில் விஜய் நடித்த மதுர

காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2725)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைக்கால நிர்வாகம் குறித்து
# அரசாங்கம் பேச்சுக்களை நடத்த முன்வராதது
# சமாதான முயற்சியை இழுத்தடிக்கும் செயல்
## கூட்டமைப்பு எச்சரிக்கை

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை நடத்த அரசாங்கம் முன்வராது, இடைக்கால நிர்வாகசபை தொடர்பில் மாற்று யோசனையைத் தயாரித்து வருவதாக கூறுவது - சமா தான முயற்சியை இழுத்தடிக்கும் செயலாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரவித்துள்ளது.

அரசாங்கத்தின் இத்தகைய போக்கினால் சமாதானப் பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கும் என்ற நம்பிக்கையற்றுப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் தனது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் - சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட முடியாது தடுமாறுகிறது. இத்தகைய நிலை புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பலவீனப்படுத்தவே உதவும்.

பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்க முடியும் என்ற நம்பிக்கையற்றுப் போகின்றது. இடைக்கால நிர்வாகசபை குறித்து விடுதலைப்புலிகள் "திட்டவரைபொன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

இதனடிப்படையில் அரசாங்கம் பேசுவதை விடுத்து, புதியமாற்றுத் திட்டமொன்றைத் தயாரிப்பதாக கூறுகின்றது. இது சமாதான முயற்சியினை இழுத்தடிக்கும் நடவடிக்கையாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக மாற்றுத்திட்டத்தினை அரசாங்கம் முன்வைக்க முடியாது என்றும், தமது அனுமதியின்றி எதனையும் செய்யமுடியாது என்றும் ஜே.வி.பி கூறுகின்றது.

இந்த நிலையில் அரசாங்கம் மாற்றுத் திட்டத்தை எவ்வாறு முன்வைக்க முடியும்? அரசாங்கம் காலத்தைப் போக்குவதற்காகவே இத்தகைய செயற்பாட்டில் இறங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பில் புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் கொல்லப்பட்டுள்ளனர். படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட அரசாங்கத்தால் முடியவில்லை. அரசாங்கம் - படையினர் மற்றும் தனது புலனாய்வுப் பிரிவு மூலம் தமிழ்க்குழுக்களை வைத்துப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினைப் பலவீனமடையச் செய்வதற்கு முயற்சிக்கின்றது.

மட்டக்களப்பை உள்ளடக்கிய பகுதிகளில் இடம்பெறும் கொலைகளுக்கு அரசே பொறுப்பேற்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# அபிவிருத்தியின் பலன் கிட்டவில்லையெனில் மக்கள் அரசாங்கத்தை தூக்கி எறிவர்!
## லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகிறார்



(கொழும்பு)

எந்தவொரு நாடும் தமது வளர்ச்சிக்கு - படிப்படியான முன்னேற்றத்திற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். அவ்வாறு செயற்படாது விட்டால் புதிய அரசாங்கத்திடம் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள மக்கள் முனைவார்கள் என, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

இந்திய கரையோர ஒத்துழைப்புச் சங்க மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்-

நாட்டின் அபிவிருத்தியின் பிரதிபலனை எதிர்பர்க்கும் மக்கள், அந்தப் பிரதிபலன் கிட்டாமல் போனால் அரசாங்கத்தைக் கவிழ்க்கவும் தயங்கமாட்டார்கள்.

அரசாங்கம் தேசிய கொள்கை ஒன்றைத் தயாரித்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இது கிராமிய பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பவே மேற்கொள்ளப்படுகிறது. தனியார் துறையின் உதவியுடன் அரசதுறையினரை பலப்படுத்துவதே இதன் நோக்கமாகும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இவ்வாறான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# உதவி வழங்கும் வங்கிகள் அமெரிக்காவில் கூடவுள்ளன!

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திக்கு உதவி வழங்குவதா? இல்லையா? என்பது பற்றி உதவி வழங்கும் வங்கிகள் அடுத்த மாதம் அமெரிக்காவில் கூடி ஆராயவுள்ளன.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாடுகளுக்கு உதவி வழங்கும் ஜப்பான் நாட்டின் வங்கி ஆகியவற்றின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் கொழும்பில் கூடி ஆராய்ந்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கி - அரசிடம் வழங்கிய நீர் முகாமைத்துவக் கொள்கையை, இந்த வருடம் நவம்பர் மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சரவையில் சமர்ப்பித்து அங்கீகாரம் வழங்கத் தவறின், நீர் முகாமைத்துவ அபிவிருத்திக்கென ஒதுக்கீடு செய்த 17 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கமாட்டாதென அரசுக்கு அறிவித்துள்ளது.

உலக வங்கி - ஐக்கிய தேசியக் கட்சி அரசிடம் சமர்ப்பித்த 'இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவோம்' (நலிகுமுதுவ சிறிலங்கா) என்ற கொள்கையை, தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு நிராகரித்து 'நாட்டை மாற்றியமைப்போம்' (ரட்டதட்ட) என்ற பொருளாதாரக் கொள்கையை முன்வைத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய இரு அரசும் முன்வைத்துள்ள பொருளாதாரக் கொள்கையை ஒத்த பொருளாதாரக் கொள்கையில் நாட்டு மக்களுக்கு எது உகந்தது என இனங்கண்டு, அவை நாட்டின் அபிவிருத்திக்குப் பயனளிக்கும் என்று ஆராயும் என்றும், இதன் பின்னரே உதவி வழங்குவதா இல்லையா என்பது பற்றி ஆராய்வது என்றும் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசித் தீர்மானிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (01)

# மட்டக்களப்பு படுகொலைகளுக்கு இராணுவத் தரப்பே காரணம்!
## அரியநேத்திரன் எம்.பி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் - இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள இரண்டு முகாம்களுக்கு நடுவில், புலிகளின் இரண்டு சிரேஷ்ட உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கு, இராணுவத்தினர் அல்லது இராணுவ புலனாய்வுப் பிரிவினர்தான் காரணம். இதனை நாமும் அறிவோம் மக்களும் அறிவார்கள் என, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவங்கள் குறித்து அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பைத் துண்டாடும் சம்பவங்கள் காலங்காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் பிரதேசவாதத்தை வைத்து பிரிக்கும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகிறது. இவற்றுக்கெல்லாம் காரணம் அரசாங்கம்தான்.

மட்டக்களப்பு காலங்காலமாக வடக்குடன் பின்னிப்பிணைந்த மாவட்டமாகும். தற்போது வடக்கு - கிழக்கு ஓர் சுய ஆட்சியைப் பெறும் சந்தர்ப்பத்தில் மேற்குறிப்பிட்ட செயல்கள் கவலையை ஏற்படுத்துகின்றன என மேலும் தெரிவித்தார்.

# தன்னாட்சி அதிகாரசபை மீது பேச்சுக்களை ஆரம்பிக்கவும்!
## ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும்படி பொதுஜன ஐக்கிய முன்னணியின் அனைத்து பங்காளிக் கட்சிகளும் அமைச்சர் டி.எம்.ஜயரத்ன ஊடாக ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இந்தப் பேச்சுவார்த்தை எதிர்வரும் வாரத்தில் இடம்பெறுமெனவும் டி.எம்.ஜயரத்ன கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தை தடைப்பட்டு ஒருவருட காலமாகிவிட்ட்து. இதனால் நாடு மீண்டும் யுத்தத்துக்குச் செல்லும் நிலை ஏற்படுமெனவும் பங்காளிக் கட்சிகள் கருதுகின்றன.

இதனால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபை ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை ஆரம்பித்த பின்னர் அரசின் மாற்று யோசனைகளை முன்னெடுத்துச் செல்லமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# மேலதிக நேரக் கொடுப்பனவு கோரி ரயில்வே ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

ரயில்வே அதிகாரசபையை விலக்கிக்கொள்ளும்படியும், ரயில்வே ஊழியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்கும்படி கோரியும் ரயில்வே ஊழியர்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

ரயில்வே அதிகாரசபையைச் சேர்ந்தவர்களாலும், ரயில்வே சொத்துக்களைப் பாதுகாக்கும் அமைப்பினராலும் நடத்தப்படவுள்ள இந்த ஆர்ப்பாட்டப் போராட்டத்தில், ரயில்வே அதிகாரசபையின் 20 தொழிற்சங்கங்களின் அங்கத்தவர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகவும் போராட்டத்தின் அழைப்பாளர் டபிள்யூ.சில்வா தெரிவித்தார்.

கடந்த வருடம் ஜூன் மாதம் 23 ஆம் திகதி ரயில்வே திணைக்களத்தை நீக்கிவிட்டு ரயில்வே அதிகாரசபையைத் தோற்றுவித்தும் - அது ஊழியர்களுக்கோ, நாட்டு மக்களுக்கோ எதுவித சேவைகளையும் வழங்காத நிறுவனமாக இருப்பதனால் ஆர்ப்பாட்டப் போராட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பின்போது, இது பற்றிக் கருத்துக்கூறிய சில்வா -

2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி எமது அமைப்பு பல தொழிற்சங்கங்களுடன் ஒன்றிணைந்து ரயில்வே அதிகாரசபைக்கு எதிராகப் பரந்த வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தியதாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி முறிவடைந்ததனால் இந்தப் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தியதாகவும் தெரிவித்தார்.

இதன்பின்னர் ஆட்சிக்குவந்த அரசு ரயில்வே அதிகாரசபையை நீக்குவதாக வாக்குறுதி அளித்தும், அது இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை என்பதனால் இந்த ஆர்ப்பாட்டப் போராட்டத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம்

ரயில்வே ஊழியர்களுக்குக் கடன்தொகை வழங்குவதைப் பொதுத் திறைசேரி நிறுத்தியுள்ளதால் கடன் பெறமுடியாத நிலை தோன்றியுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலின்போது 60 சதவீதமான அரசாங்க ஊழியர்கள், இந்த அரசினை அதிகாரத்துக்குக் கொண்டுவருவதற்கான ஒத்துழைப்பை வழங்கினர். இவ்வாறு அவர்கள் ஒத்துழைப்பு வழங்கியது தனியார் மயப்படுத்தலுக்கு எதிராகவும், ரயில்வே அதிகாரசபையை நீக்கி அரச ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குமே என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடா கிழக்கிற்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அக்கியோசூடா இன்றும், நாளையும் கிழக்குப் பிரதேசத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

மொனறாகல வைத்தியசாலையில் நடைபெறும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு விட்டு மட்டக்களப்புக்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ள இவர் அங்குள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கிழக்கின் நிலவரம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன் கிழக்கின் இராணுவக் கட்டளைத் தளபதியையும் சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பஸ் கட்டண உயர்வு; அமைச்சரவை ஆராய்வு

பஸ் கட்டணங்களை அதிகரிப்பது குறித்து அமைச்சரவை நாளை ஆராயவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து போக்குவரத்து சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடுசெய்வதற்காக கட்டணங்களை அதிகரிப்பது குறித்து அமைச்சரவை ஆராயவுள்ளது.

இதுவரைகாலமும் மூன்று கிலோ மீற்றர் தூரத்துக்கு ஆகக்குறைந்த கட்டணமாக மூன்று ரூபா அறவிடப்பட்டது என்றும், அதனை ஒரு கிலோ மீற்றருக்கு 2 ரூபாவாகவும்,

3 ரூபா அறவிடப்பட்ட தூரத்துக்கு 4 ரூபாவாக அதிகரிப்பதற்கும் முடிவெடுத்துள்ளதாகவும் இதனை அமைச்சரவையில் சமர்ப்பித்து இருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறித்த
# நிதியமைச்சரின் கருத்துக்கு தொழிற்சங்கங்கள் கண்டனம்!

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எதிர்காலம் தொடர்பாகத் தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிட்டுள்ளதாக, நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம கருத்து வெளியிட்டமை குறித்து - பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

கூட்டுத்தாபனத்தின் மேம்பாட்டுக்காக தொழிற்சங்கங்களின் யோசனைகளை ஆராய்ந்து பார்க்கின்ற சந்தர்ப்பத்தில், அமைச்சர் சரத் அமுனுகம இவ்வாறான கருத்தைத் தெரிவிப்பது நியாமற்றது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தொடர்ந்து திறைசேரியின் நிதியில் கொண்டு செல்வது சிரமம் என அமைச்சர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

நாட்டின் பொருளாதார நாடிகளாகக் கருதப்படும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், போக்குவரத்துச்சபை, ரயில்வே திணைக்களம், முதலீட்டுச்சபை என்பவற்றை நடத்துவதற்கு நாளாந்தம் திறைசேரி மூலம் பெருந்தொகையான பணம் வழங்கப்படுகின்றது. ஆனால், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வங்கிகள் கடன் வழங்க மறுக்கின்றன.

இதற்கான காரணம் - ஏற்கனவே வங்கிகளிலிருந்து பெற்ற கடனை அடைக்காமையாகும் என தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு கடனால் தத்தளிக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு, 41 சதவீதமான எரிபொருள் நிலையங்களை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கவும், அதன் மூலம் கிடைக்கும் 50 ஆயிரம் டொலர் நிதியை வங்கிக்குச் செலுத்தவும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

இந்த விடயம் தொடர்பாக அரச மட்டத்திலும், அமைச்சரவை மட்டத்திலும் ஆராய்ந்த பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும். உலக சந்தையில் முன்னெப்போதும் இல்லாதவாறு எரிபொருளின் விலை அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண்களுக்கான இரட்டையர் படகோட்டத்தில் தங்கம் வென்ற ருமேனிய வீராங்கனைகள்

## அமெரிக்க வீரர் ஹெல்ப்ஸ்

# எட்டுப் பதக்கங்களைப் பெற்றதன் மூலம் ரஷ்ய வீரரின் சாதனையை சமன் செய்தார்!

ஒலிம்பிக் போட்டியில் நீச்சலில் அமெரிக்க விரர் ஹெல்ப்ஸ் 8 பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

19 வயதான ஹெல்ப்ஸ் 6 தங்கப்பதக்கம் மற்றும் 2 வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

4X100 மீற்றர் மெட்லே தொடர் நீச்சலில் அமெரிக்க அணி தங்கப் பதக்கம் வென்று புதிய உலக சாதனை படைத்தது. இதன் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளாத ஹெல்ப்ஸ் தகுதிச்சுற்றில் பங்கேற்று இருந்தார்.



இதனால் அவருக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.இது ஹெல்ப்ஸுக்குக் கிடைத்த 6 ஆவது தங்கப்பதக்கம்.

மொத்தத்தில் 8 பதக்கங்கள் பெற்றதன் மூலம் ஹெல்ப்ஸ் ரஷ்ய வீரர் அலெக்சான்டரின் சாதனையை சமன் செய்தார்.

அலெக்ஸாண்டர் 1980 ஆம் ஆண்டில் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் நடந்த ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக் போட்டியில் 8 பதக்கம் வென்றிருந்தார்.

இதுவே ஒரே ஒலிம்பிக்கில் தனி நபர் ஒருவர் பெற்ற அதிக பதக்கமாகும்.

அந்தச் சாதனையை தற்போது ஹெல்ப்ஸ் சமன் செய்துளளார்.

மொஸ்கோ ஒலிம்பிக் போட்டியில் பல நாடுகள் பங்கேற்கவில்லை. அதில் உள்ளூர் வீரரான அலெக்சாண்டர் பதக்கங்களைக் குவித்தார்.

ஆனால் ஏதென்ஸ் போட்டியில் கடும் சவாலுக்கு மத்தியில் ஹெல்ப்ஸ சாதனையை சமன் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.






ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்ற ஜேர்மன் வீரர் - வீராங்கனைகள் நால்வர் பதக்கங்களுடன்....

# ரஷ்ய வீராங்கனையின் தங்கப்பதக்கம் பறிப்பு !

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பெண்களுக்கான பாரம்தூககுதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற முப்பது வயதான ரஷ்ய வீராங்கனை எறீனா, ஊக்கமருந்து பாவித்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால், அவர் ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து நீக்கப்பட்டதுடன் அவருக்கு வழங்கப்பட்ட தங்கப் பதக்கமும் மீளப் பெறப்பட்டிருக்கிறது.

போட்டி முடிவடைந்த பின்னர் இவர் ஊக்கமருந்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். சர்வதேச போட்டியில் இவர் இரண்டாவது தடவையாகவும் ஊக்க மருந்து பாவித்த குற்றச்சாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருப்பதால் எதிர்வரும் காலங்களில் சர்வதேசப் போட்டிகளில் இவர் பங்குபற்றத் தடை விதிக்கப்படலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி வெள்ளிப் பதக்கம் பெற்ற கியூப வீராங்கனைக்கு தங்கப் பதக்கமும், வெண்கலப் பதக்கம் பெற்ற ஜேர்மன் வீராங்கனைக்கு வெள்ளிப் பதக்கமும் மற்றொரு ரஷ்ய வீராங்கனைக்கு வெண்கலப் பதக்கமும் கிடைக்கவுள்ளன.

# ஒலிம்பிக் நடைப் போட்டியில் கிரேக்கத்துக்கு முதல் தங்கம்

தற்போது இடம்பெற்றுவரும் ஒலிம்பிக் போட்டியில் கிரேக்கம் நேற்று தனது முதலாவது தங்கப் பதக்கத்தைப் பெற்றது.

பெண்களுக்கான 20 கிலோ மீற்றர் நடைப்போட்டியில் கிரேக்க வீராங்கனை அதனிகா சோமலேகா தங்கப் பதக்கத்தை வென்றார்.

2001 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான போட்டியில் தங்கம் வென்று தற்போதைய உலக சம்பியனாக இருந்த ரஷ்ய வீராங்கனையான ஒலிம்பியாடோ இயோகாவா கிரேக்க வீராங்கனைக்கு சவாலாக விளங்கினார்.

எனினும் கிரேக்க வீராங்கனை ஒரு மணித்தியாலம் 29 நிமிடம் 12 செக்கன்களில் குறித்த தூரத்தை சென்றடைந்து தங்கப் பதக்கத்தை வென்றெடுத்தார்.

# 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜஸ்ரின் ஹெட்லினுக்கு தங்கம்

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான நூறு மீற்றர் ஓட்டத்தில் அமெரிக்க வீரரான ஜஸ்ரின் ஹெட்லின் தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.

இவர் இந்த நூறு மீற்றர் தூரத்தை 9.58 செக்கன்களில் ஓடிமுடித்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

வெள்ளிப் பதக்கத்தை போர்த்துக்கல் வீரர் பிரான்சிஸ் ஒபிலீரே பெற்றார்.

இதேவேளை - சிட்னி ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற மொறிஸ் கிறீன் இந்தப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையே வென்றார்.

## ஒலிம்பிக் ரெனிஸ் ஹெனினுக்கு தங்கம்!



ஒலிம்பிக் ரெனிஸ் பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் பெல்ஜிய நாட்டு வீராங்கனை ஜஸ்ரின் ஹெனின் தங்கப்பதக்கத்தை வென்றார்.

இறுதிப்போட்டியில் மவுஸ் நிஸ்மோவை 6-3, 6-3 என்ற நேர் செட்களில் தோற்கடித்ததன் மூலமே இவர் தங்கப் பதக்கத்தை வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் தங்கப் பதக்கம் பெற்ற நாடுகளின் பட்டியலில் பெல்ஜியம் இடம்பிடித்துள்ளது.

## மரதன் ஓட்டத்தில் ஜப்பான் சம்பியன்!

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெறுவாரென எதிர்பார்க்கப்பட்ட தற்போதய சம்பியனான பிரிட்டன் வீராங்கனை கோணா றிஸ்க்லி இந்தப் போட்டியின் இடைநடுவில் விலகிக் கொண்டார்.

இந்தப் போட்டியில் ஜப்பான் வீராங்கனை முசிபிர் தங்கப் பதக்கத்தை வென்றார்.

## சுவீடன் வீரருக்கு முப்பாச்சலில் தங்கம்

தற்போது நடைபெற்றுவரும் ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான முப்பாச்சல் போட்டியில் சுவீடன நாட்டைச் சேர்ந்த கிறிஸ்ரியன் ஒல்சன் தங்கப் பதக்கத்தை வென்றார்.

இவர் 17.9 மீற்றர் தூரத்தைப் பாய்ந்தே தங்கப் பதக்கம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கம் வென்ற பெலருஸ் நாட்டு வீராங்கனை யூலியா நெஸ்ரறென்கோ.

## கிரிக்கெட் கழகங்களில்——

# யாழ்.மாவட்ட வீரர்களை பதிவு செய்ய நடவடிக்கை

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் கழக வீரர்கள் சுற்றுப்போட்டிகளில் தாம் அங்கத்துவம் வகிக்கும் கழகத்தைத் தவிர்த்து ஏனைய கழகங்களில் விளையாடுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்காக கிரிக்கெட் கழக வீரர்களை யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்திடம் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

ஒரு கழக வீரர் இன்னொரு கழகத்துக்கு மாறுவதாயின் தன்னுடைய கழகத்தின் சம்மதக் கடிதத்துடன் ஆறு மாதங்களின் பின் புதிய கழ்கத்தில் இணையலாம் எனவும், தன்னுடைய கழக அனுமதியின்றி விலகினால் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்துக்கு தகவல் தெரிவித்த நாளில் இருந்து ஒரு வருடத்தின் பின்பே புதிய கழகத்தில் இணையலாம்.

ஒரு கல்வி நிறுவன வீரர் கழகத்தின் பெயரிலும் நிறுவன பெயரிலும் பெயரை பதிவு செய்யலாம். ஆனால் அவர் சுற்றுப்போட்டிகளில் ஒரு அணியை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்தலாம் என்று யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மேலும் இந்தப் பதிவுகள் யாவும் இம் மாதம் 25 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (58)

## உள்ளூராட்சி வார தினத்தில் இடம்பெற்ற

# கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சிறந்த வீரர்களுக்கான பரிசளிப்பு

மானிப்பாய் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வின் இறுதிப் பெருவிழாவும் பரிசளிப்பு விழாவும் கடந்த வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதேச சபை செயலக மண்டபத்தில் செயலாளர் பிரானசிஸ் விக்டர் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் கே.இராசையா - பிரதேச சபை அலுவலக உத்தியோகத்தர்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட 15 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய வெற்றியாளர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தா.

வலி.தென்மேற்கு, வலி.வடக்கு பிரதேசசபைகள் பங்குகொண்ட இந்தத் துடுப்பாட்டப் போட்டியில் முதலாமிடத்தை வலி.தென்மேற்குப் பிரதேச சபையும், இரண்டாம், மூன்றாமிடத்தை வலி. தெற்கு, வலி. வடக்குப் பிரதேச சபை அணியினரும் வெற்றிகொண்டனர்.

இவற்றில் சிறந்த களத்தடுப்பாளராக வலி.தென்மேற்கு அணியைச் சேர்ந்த வீரர் த.சிவசுதன், சிறந்த பந்து வீச்சாளராக இதேயணியைச் சேர்ந்த ச.கமலகாந்தும், சிறந்து துடுப்பாட்ட வீரராக வலி.தெற்கு பிரதேசசபையைச் சேர்ந்த வீரர் பா.அகிலனும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, இவர் சுற்றுப் போட்டியின் ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இவர்களுக்கான விருதுகளையும், சான்றிதழ்களையும் பிரதம விருந்தினர் கே.இராசையா வழங்கிக் கௌரவித்தார். (48)




## உதைபந்தாட்டப் போட்டி!

தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் அனுசரணையுடனும், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அதரவுடனும் வதிரி தேவரையாளி யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் லீக் ஆட்டங்களில் இன்று பிற்பகல் 4 மணிக்கு கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும்,

நாளை பிற்பகல் 4 மணிக்கு வல்லை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

# மினி உலகக்கிண்ண போட்டியில் டெண்டுல்கர், முரளி ஆடுவரா?



இங்கிலாந்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள மினி உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியைச் சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் - தோள்பட்டையில் ஏற்பட்ட உபாதை காரணமாக பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[illegible] போட்டியில் பங்குபற்றாத இந்திய அணி வீரர் சச்சின் டெண்டுல்கரும் மினி உலகக்கிண்ணப் போட்டியில் முதுகு உபாதை காரணமாக பங்குபற்றுவாரா என சந்தேகம் எழுந்துள்ளது.

இவர்கள் இருவரும் இல்லாமல் மினி உலகக்கிண்ணப் போட்டி களை கட்டாது என போட்டி ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

இந்த மாதம் நடைபெறுவது நான்காவது மினி உலகக்கிண்ணப் போட்டியாகும். இந்த மினி உலகக் கிண்ணப் போட்டியில் - கடந்த வருடம் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியில் பங்குபற்றிய அணிகள் பங்குபற்ற தகுதிபெற்றுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் சுயசார்பு விருத்திக்கு புனர்வாழ்வு நிறுவனம் உதவுகிறது

## திட்ட முகாமையாளர் தேவானந்தா தெரிவிப்பு

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டம் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தே.தேவானந்தா தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தின் உப அலுவலகம் ஒன்றைக் கைதடிச் சந்தியில், தென்மராட்சிப் பிரதேச் செயலர் செ.ஸ்ரீநிவாசன் கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைத்தார்.

இந்த வைபவம் - நிறுவனத்தின் தலைவர் அ.நல்லதம்பி தலைமையில் நடைபெற்றது.

தேவானந்தா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது -

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தென்மராட்சிப் பிரதேசத்தில் மாத்திரம் 18 கிராம அலுவலர் பிரிவுகளில் வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பெண்கள் - சுயசார்பு நிலையை அடையவேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு, அவர்களின் உள அபிவிருத்திக்காக உழைக்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் உரையாற்றுகையில் -

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த, பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனததின் சேவை வரவேற்கத்தக்கது என்றார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் ஜெயராஜ், தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் முரளி ஆகியோரும் உரையாற்றினர். (17)



தேசிய போட்டிக்கு தெரிவாகியுள்ள வவுனியா இறம்பைக்குளம் மகளீர் கல்லூரி உடற்பயிற்சி மாணவிளையும், பாடசாலை அதிபர் அருட்சகோதரி ஜெயநாயகி மற்றும் அருட்தந்தை ஜெயபாலன், பயிற்றுவிப்பாசிரியர்களைப் படத்தில் காணலாம் (03)

### வடமராட்சி மத்திய கல்லூரிக்கு மாடிக் கட்டடம்

நெல்லியடி வடமராட்சி மத்திய கல்லூரியில் மாடிக் கட்டடம் அமைக்க, நிகொட் அமைப்பு நிதியுதவி வழங்கியுள்ளது.

5 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மாடிகளைக் கொண்ட வகுப்பறைத் தொகுதியொன்றே அமைக்கப் படவுள்ளது. (14)

### கல்விக் கோட்ட அதிகாரி நியமனம்

பளை கல்விக் கோட்டத்தின் கோட்டக் கல்வி அதிகாரியாக சின்னத்துரை இராமலிங்கம் கடந்த 11 ஆம் திகதி முதல் நியமிக்கப் பட்டுள்ளார்.

ஏற்கனவே கோட்டக் கல்வி அதிகாரியாக கடமைபுரிந்த அ.கயிலை பிள்ளை - சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றதன் காரணமாக, அந்த இடத்துக்கு இராமலிங்கம் நியமிக்கப்பட்டார்.

இவர் வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையின் அதிபராகக் கடமை புரிந்தவராவார். (122)

பொன்னாலை தெற்கில்

## மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் மலசலகூட வசதியின்றி அவதி

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்பு பொன்னாலை தெற்கில் குறிப்பிட்ட ஓர் பிரதேசத்தில் சுமார் 10 குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளன.

அந்தக் குடும்பங்களுக்கு மலசலகூட வசதி உட்பட, எந்தவித வசதிகளும் எந்த நிறுவனங்களாலும் செய்துகொடுக்கப்படவில்லை.

இதனால் இந்தப் பிரதேச மக்கள் தமது இயற்கைக்கடன்களைக் கழிப்பதற்காக அருகிலுள்ள பற்றைகளையே நாடவேண்டியுள்ளது.

இதனால் இந்தப் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன், சூழலும் மாசடையும் அபாயம் காணப்படுகிறது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், நிறுவனங்களும் இந்த விடயத்தில் தலையிட்டு, இந்தப் பிரதேச மக்களுக்கு மலசலகூட வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும் என மக்கள் தெரிவித்துள்ளனர். (207)

### சுகாதார அதிகாரிகள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு பாரியளவில் வெற்றிடம் நிலவி வருவதாக, பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சிவபாதம் தெரிவித்தார்.

குடாநாட்டில் 88 சுகாதார மருத்துவ அதிகாரிகள் கடமையாற்ற வேண்டிய நிலையில், 7 பேர் மட்டுமே கடமையில் உள்ளனர்.

இதனால், மக்கள் மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (14)

## ஐஸ்கிறீம் வான்களால் மாணவர்கள் சிரமம்

வலி.மேற்கில் பல இடங்களிலும் ஐஸ்கிறீம் வான்கள் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்று பாராமல், தமது ஐஸ்கிறீம் வான் ஒலி பெருக்கிகளைப் பெரும் சத்தத்துடன் அலறவிட்டுக்கொண்டு செல்கின்றன.

இதனால் இந்தப் பிரதேச பாடசாலை மாணவர்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்க வேண்டியதாக உள்ளது.

அத்துடன் பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிலையங்களுக்கும் முன்னால் நின்று ஐஸ்கிறீம் வியாபாரம் நடைபெறுவதும், சில இடங்களில் காணக்கூடியதாக உள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், பொலிஸாரும் இந்த விடயத்தில் தலையிட்டு, மாணவர்களின் கல்விக்கு இடையூறாக இருக்கும் ஐஸ்கிறீம் வான் உரிமையாளர்கள் மீது - கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தப் பகுதி மாணவர்களும், மக்களும் எதிர்பார்க்கின்றனர். (207)

## வீடமைப்பு திட்டத்தின்கீழ் மேலும் 21 ஆயிரம் வீடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உலக வங்கியின் துரித வீடமைப்புத் திட்டத்தின் கீழ் - மேலும் 21 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

கடந்தகால யுத்த அழிவுகளால் பாதிக்கப்பட்டு, அடிப்படை வசதிகளற்ற தற்காலிக வாழ்விடங்களில் வாழ்ந்துவரும் மக்களினது நலன்களைக் கவனத்திற்கொண்டே - உலக வங்கி இந்த வீடமைப்புத் திட்டத்தை அமுலாக்கவுள்ளது.

கட்டம் கட்டமாக நடைமுறைககு வரவுள்ள இந்தத் திட்டம் - முன்னுரிமை அடிப்படையிலேயே நடைமுறைப்படுத்தப்படும்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்த அழிவினாலும், இராணுவத்தால் உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு, இடம் பெயர்ந்து தற்காலிக கொட்டகைகளில் எந்த அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் முகமாகவே, உலக வங்கி இந்த துரித வீடமைப்புத் திட்டத்தை செயற்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

### டெங்கு விழிப்புணர்வு செயற்பாடு

(பருத்தித்துறை)

கடந்த வெள்ளிக்கிழமையன்று பருத்தித்துறை சமுர்த்தி அபிவிருததி உத்தியோகத்தர்கள் சுப்பர்மடம் பகுதியில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது பருத்தித்துறைப் பகுதி பொதுச் சுகாதார உத்தியோகத்தர் அருந்தவராஜா, பருத்தித்துறை தலைமை சுகாதார உத்தியோகத்தர் ரவிச்சந்திரன், பருத்தித்துறை பிரதேச செயலக சுற்றுச்சூழல் உத்தியோகத்தர் ஜீவன்பாபு ஆகியோரும் கலந்துகொண்டு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

நாளை மறுதினம் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயப் பகுதியில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளை இவர்கள் மேற்கொள்ளவுள்ளனர். (15)

### கட்டடத் தொகுதி திறந்துவைப்பு

(உடுவில்)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில், நிகொட் நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலைக் கட்டடத் தொகுதியொன்று வைபவ ரீதியாகக் கையளிக்கப்பட்டது.

நிகொட் அமைப்பின் வடக்கு-கிழக்கு மாகாணத்திட்ட இணைப்பாளரான ரி.இலங்காநேசன் இந்தப் புதிய கட்டடத் தொகுதியை கடந்த சனிக்கிழமை பிற்பகல் திறந்து வைத்தார். (14)

## க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு தேசிய ரீதியில் கட்டுரைப் போட்டி

கல்வி கலாசார மனிதவள அமைச்சு, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் எனபவற்றுடன் இணைந்து, இலங்கை சட்டத்தரணிகள் சங்க சட்ட உதவி மன்றம் க.பொ.த. உயர்தர மாணவர்கள் மத்தியில், தேசிய ரீதியிலான கட்டுரைப் போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளது.

மனித விழுமியங்களை மேம்படுத்துவதன் ஊடாக முழு நிறைவான மனிதர்களை உருவாக்குவோம் என்ற தலைப்பிலான இந்தக் கட்டுரைப் போட்டி தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் தனித்தனியாக நடாத்தப்படவுள்ளது.

மாணவர்கள் தமது கட்டுரைகளை அதிபரது உறுதிப்படுத்தலுடன் செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பாக - தலைவர், சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி மன்றம், இல:153, மிருந்து மாவத்தை, கொழும்பு -12 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (31)



## 170 லட்சம் ரூபா செலவில் தாளையடியில் மருத்துவமனை

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி - தாளையடிப் பிரதேசத்தில் 170 லட்சம் ரூபா செலவில், பொது மருத்துவமனை அமைக்கப்பெற்று, கட்டுமாணப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

இராணுவத்தின் படையெடுப்பினாலும், விமானக் குண்டுவீச்சுக்களினாலும் முற்றாக அழிக்கப்பட்ட இந்தப் பொது மருத்துவமனை யாழ். அரச அதிபரின் ஆதரவோடு நிகொட் நிறுவனத்தினரால் 170 லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

மகப்பேற்று விடுதி, பெண்களுக்கானவிடுதி, ஆண்களுக்கான விடுதி மற்றும் வெளிநோயாளர் பகுதியைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனை - மீளக் குடியமர்ந்துவரும் இந்தப் பிரதேச மக்களின் மருத்துவத் தேவைகளைப் பெரிதும் பூர்த்தி செய்யக்கூடியதாக அமையுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அத்தோடு, இந்த மருத்துவமனை மிக விரைவாகத் திறக்கப்பட்டு சேவைகள் ஆரம்பிக்கப்படுமானால், அந்தப் பகுதி மக்களுககுப் பெரிதும் பயனுடையதாக அமையும் என மக்கள் தெரிவிக்கின்றர். (14)



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய ஆரம்பக் கல்வி உபகரணக் கண்காட்சி வைபவத்தில் பிரதம விருந்தினராக வருகைதந்த உதவி கல்விப் பணிப்பாளர் கே.சுப்பிர மணியத்தை மலர்மாலை அணிவித்து வரவேற்பதைப் படத்தில் காணலாம். (101)

உடுவில் கோட்ட

## பாடசாலை மாணவர்களிடையே திருமுறை விழாப் போட்டிகள்

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான திருமுறை விழா போட்டிகள் இடம்பெறவுள்ளதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்தார்.

கடந்த வருடம் பின்பற்றப்பட்ட சுற்று நிருபத்துக்கு அமைவாக, மாணவர்களிடையே தனிநபர் போட்டிகள், குழுப்போட்டிகள் என்பன இடம் பெறவுள்ளன.

நீதிச் செய்யுள் மனனப் போட்டி, பண்ணிசைப்போட்டி, தொண்டுமுறை செய்முறைப்போட்டி, கதாப்பிரசங்க போட்டி, மாலை கட்டுதல், தோரணம் செய்தல் ஆகிய போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாணவ, மாணவிகளுக்கு தனித்தனியாக விண்ணப்பங்களைத் தயாரித்து, இரு பிரதிகளை செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படியும், இந்த மாதம் இறுதியிலேயே போட்டிகள் இடம் பெறவுள்ளதாகவும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.



மந்திகை வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிபுணராகக் கடமையாற்றிய வரோனிக்கா - சேவைக்காலத்தை நிறைவுசெய்து தனது நாடான பிரான்சுக்கு செல்வதை முன்னிட்டு, வைத்தியசாலை ஊழியர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரிவுபசார நிகழ்வில் வரோனிக்கா உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (14)



இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
மூன்றாவது அகவையில்
பெயர் : ந.நிதர்சினி
முகவரி : ம் வட்டாரம், நெடுந்தீவு.

வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# முருகைக்கல்லுக்கு அழகூட்டும் பற்றீரியா!



கடலடியில் அதன் அழகை மெருகூட்டுவன முருகைக் கற்பாறைகள். இந்த முருகைக் கற்பாறைகளுக்கு அழகூட்டுவபை நாம் வெறுக்கும் பற்றீரியாக்கள்தான் என்றால் நம்பமுடிகிறதா. ஆனால், அதுவே உண்மை என்கின்றனர் நியூஹெமிஸ்பியர் பல்கலைக் கழக ஆய்வாளர்கள்.


பசுபிக்கடலின் பவளப்பாறைப் பகுதிகள் பல நிறங்களில் பளிச்சிடுவதற்கும், கரிபியன் கடலைச் செம்மஞ்சள் நிறத்தில் ஒளிரச்செய்யும் முருகைக் கற்களுக்கு அழகூட்டுபவை இந்தப் பற்றீரியாக்கள். அதுமட்டுமல்லாது கடல் நீரிலுள்ள நைதரசனை முருகைக் கற்கள் உள்ளெடுக்கக்கூடிய வடிவில் மாற்றி உதவி செய்வதும் இந்தப் பற்றீரியாக்களே. கடல் நீர் நைதரசனை இவை அமோனியாவாக மாற்றி முருகைக்கற்களுக்கு உணவூட்டுகின்றன.

முருகைக்கற்களில் ஒளிரும் புளோரசன்ற் பகுதிகளை ஆய்வாளர்கள் சேகரித்து ஆராய்ந்தபோது, இந்தப் புளோரசன்ற் பகுதிகள் முருகைக்கற்களின் பகுதிகள் அல்ல என்பது தெளிவாகியுள்ளது. இவை பற்றீரியாக்களால் மாற்றியமைக்கப்பட்ட முருகைக்கற்பகுதிகள் என்பது தெரியவந்தது. சயனோ பற்றீரியா, நீலப்பச்சை அல்கா என்பன நீல நிறத்தை உள்ளிளுத்து மாறுபட்ட செம்மஞ்சள் நிறத்தை வெளிகாட்டுவது கண்டறியப்பட்டது.

முருகைக்கல் - பற்றீரியா - அல்கா இவற்றிடையேயான தொடர்பு ஒன்றையொன்று ஆதரித்துத் தாங்கி வாழும் இயல்பாக இருப்பதாகப் பேராசிரியர் லெஸ்ஷர் கூறுகிறார்.

# அனுமதிப்பத்திரமின்றி உலகை சுற்ற முயற்சி

எரிபொருள் இடையில் நிரப்பாது ஒரே மூச்சில் உலகை, விமானத்தில் சுற்றி வருவது என்ற அமெரிக்க வீரர் ஸ்ரீவ் போசெட்டின் பயணம் அநேகமாக அடுத்தாண்டு முற்பகுதியில் ஆரம்பிக்கும்.




எல்லாம் நன்றாகவே இருப்பதாக இந்த முயற்சிக்கு நிதி உதவி வழங்குபவரான சேர் ரிச்சட் பிரான்சன் கூறுகிறார். இவரே விமானத்தின் மேலதிக விமானியாகவும் விளங்கவுள்ளார். ஆனால், இன்னமும் அவருக்கு விமானிகளுக்கான அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லை. இந்த விமானத்தை விமானத்துறை நிபுணரான போர்ட்ருடன் வடிவமைத்துள்ளார். இவரது விமான வடிவமைப்பு நிறுவனம் 1986 ஆம் ஆண்டிலும் வொயேஜர் என்ற சாதனை விமானத்தை தயாரித்திருந்தது. சேர் ரிச்சர்ட் மற்றும் போசேட்டின் முயற்சி முன்னதாக இந்த ஆண்டில் ஏப்ரல அல்லது ஒக்ரோபர் மாதத்திலேயே நடைபெறவிருந்தது.

சேர் ரிச்சட்டும், போசேட்டும் முன்னர் இணைந்து பலூனில் பறந்து உலகைக் கடக்க முயன்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களின் பயணம் பின்போடப்பட்டுவருவதற்குக் காரணம் போசேட்டுக்கு ஜெட் விமான ஓட்டி அனுமதிப் பத்திரம் இல்லாமையே. எனினும், இவர் ஓர் சிறந்த விமான ஓட்டி என்கின்றனர் இவரின் சகாக்கள்.

இவர்கள் பறக்கவுள்ள விமானம் - விசேட உலோகத்தால் வடிவமைக்கப்பட்டது. மிகவும் இலேசான பாரமற்ற இந்த உலோகத்திலான விமானம் - தனது நிறையின் நான்கு மடங்கு நிறையான எரிபொருளுடன் 40 ஆயிரம் கிலோ மீற்றரை பறந்து கடக்கக்கூடியது. இந்த விமானம், ஏற்கனவே எட்டுமணிநேர சோதனைப் பறப்பை வெற்றிகரமாக முடித்துள்ளது. எனினும், சாதனையின்போது இந்த விமானம் 80 மணிநேரம் பறக்கவேண்டியிருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. 34.5 மீற்றர் நீளமான இறக்கையே இதன் எரிபொருள் தாங்கியாகவும் செயற்படும்.

# நரம்பைக் காக்கும் புழுவின் புரதம்

ஒரு வகைப்புழுவில் இருந்து பெறப்படும் புரதம், மனித மூளையைத் தாக்கி ஞாபகமறதி மற்றும் மூளைக்கலங்களை அழிக்கும் பார்கின்சன்ஸ் மற்றும் அல்சீமர் நோய்களைக் குணமாக்கும் சக்தியைக் கொண்டிருப்பதாக ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. வோஷிங்டன் மருத்துவக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இந்தப் புழுப்புரதம் மூளைக்கலங்கள் அழிக்கப்படுவதைத் தடுப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்தப் புரதவகை போன்று மருந்தையோ அன்றி மரபணுச் சிகிச்சைமூலம் இந்தப் புரதவகையை உற்பத்திசெய்தோ இந்த நோயைக் கட்டுப்படுத்தும் முதல்படிக்கு வந்துள்ளதாக, சயன்ஸ் என்ற சஞ்சிகை கூறுகிறது.



எலிகளில் செய்யப்பட்ட ஆய்வில் பார்கின்சன்ஸ் மற்றும் அல்சீமர் நோய்களின்போது, நரம்புகளிடையே தொடர்பைக் கொடுக்கும் ஒருவகைக் கலம் தானாகவே அழிவதால், நரம்புகளூடாகச் செய்திகள் கடத்தப்பட்டுத் துண்டிக்கப்படுவது கண்டறியப்பட்டது.

இதன் பின்னர் நரம்புகளும் அழிவது அவதானிக்கப்பட்டது. எனினும் இந்தப் புரதம் (SIRT-1) இந்தத் தொழிற்பாட்டை முழுமையாகவோ அன்றிப் பகுதியாகவோ தடுத்து நிறுத்துவது அவதானிக்கப்பட்டது. ஆய்வாளர்களின் கருத்துப்படி - நரம்புகளின் அழிவுகள் தாமதப்படுத்தப்படுவதால், நரம்புகளைக் காக்கும் தமது முயற்சிகளுக்கு இந்தப் புரதம் உதவுவதாகக் கூறுகின்றனர்.

தமது அடுத்தபடி எவ்வாறு இந்த SIRT - 1 புரதம் நரம்புகளின் அழிவைத்தடுக்கிறது என்பதைத் துல்லியமாகக் கண்டறிவதுதான் என்கிறார் பேராசிரியர் மில்பிரான்ட்.


முன்னர் இந்த நோய்த் தடுப்பிற்காக பிரிட்டனில் செலஜிலின் என்ற மருந்து பரீட்சார்த்தமாகப் பாவித்த சமயம் அநேகமான இறப்புக்கள் ஏற்பட்டதாக 1995 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஓர் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நரம்புகளின் அழிவுகளிலிருந்து பாதுகாக்கும் அமெரிக்கர்களின் முயற்சியை வரவேற்பதாகக் கூறும் பார்சின்சன்ஸ் நோய்த்தடுப்புக் கழகத்தின் பேச்சாளர் முடிவான ஓர் நிலையை எட்ட பல மைல்கள் இருப்பதாகவே கூறுகிறார்.

# புற்றுநோய்க்கு பேச்சு சிகிச்சை

புற்றுநோயாளிக்கு அவரின் நோய் பற்றிய முழுமையான விபரத்தைக் கொடுப்பது என்பது மேலைநாடுகளிலும் இன்றுவரை கடினமான ஓர் விடயமாகவே இருக்கின்றது.

நோயாளிக்கு வழங்கப்படும் கட்டுக்கணக்கான மருத்துவ (புரியா) அறிக்கைகள் குழப்பத்தையும், பதகளிப்பையுமே உண்டாக்குகின்றன. இதற்காக நோயாளியுடன் வைத்தியர் விலாவாரியாக உரையாடி நோயின் தன்மையை விளக்கும் ஓர் முறையும் அங்கு கடைப்பிடிப்படுகின்றது. ஆய்வுகளின்படி சில நோயாளிகள் (46%) தாம் தப்பிக்கவும் சந்தர்ப்பம் உண்டு என இதன் மூலம் நம்பத்தலைப்படுவதாகத் தெரிகிறது.



புற்றுநோய் சிகிச்சை முறைகள் நாட்டுக்கு நாடு ஏன் பிராந்தியத்துக்கு பிராந்தியம்கூட வேறுபடுகிறது. எனவே, ஒரு பொது முறையாக நோயாளியுடன் அவரின் குடும்பத்துடன், வைத்தியர் மனந்திறந்து சிகிச்சை குறித்து உரையாடுவதே சிறந்தது என கருத்துக்கணிப்புகளில் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். அதேசமயம் தாம் எதிர்பார்க்கும் சிகிச்சையை வழங்குமாறும் நோயாளி கோருவதற்கு உரிமை தரப்படவேண்டும் என்கிறார். 43 வயதான பவுலா லோயிட் என்ற புற்றுநோயாளி தரமான மருந்துகள் குறித்து வைத்தியர்கள் எமக்கு முழுமையான விபரத்தை தந்துதவவேண்டும். அவற்றை உபயோகிப்பதா, வேண்டாமா என்பதை நாம் முடிவு செயகிறோம் என்கிறார் அவர். நமக்கு விபரம் ஏதும் தெரியாததால் வைத்தியர்கள் கூறும் முறையே சிறந்தது என்று ஏற்றுக்கொண்டு விடுகின்றோம் என, விரக்தியுடன் கூறுகிறார் லோயிட் அம்மையார்.

புற்றுநோயுடன் தப்பி வாழ்வது என்பது ஒரு மிகப்பெரிய போராட்டம். அந்தப் போராட்டத்தில் வெற்றி என்றால் அதன் கருத்து சரியான வேளையில், சரியான சிகிச்சை என்பதேயாகும் என்கிறார். ஹமர்ஸ்மித் வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் ஹர்பிரித் வார்சனன். பிரிட்டனில் வருடாந்தம் 35 ஆயிரம் பேர் - புற்றுநோயால் குறிப்பாக நுரையீரல் புற்றுநோயால் மரணிக்கின்றனர். ஆரம்ப நிலையில் நோய் கண்டறியப்பட்டவர்களில் 90 வீதமானோர் தப்பிப்பிழைக்கின்றபோதிலும், அநேகமானோர் நோய் முற்றிய பின்பே வைத்தியசாலைக்கு வந்திருக்கின்றனர். இவர்களில் அநேகமானோர் தம் நோய் குறித்து ஆலோசிக்கவே தயங்குகின்றனர்.

# ஒலிம்பிக் காவலில் மூன்று செய்மதிகள்

தற்போது நடைபெற்றுவரும் உலக விளையாட்டு விழாவான ஒலிம்பிக் போட்டிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளித்துக் கொண்டிருப்பது செய்மதித் தடைவழி கண்காணிப்பு (Satellite Location System) முறையேயாகும். ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த செய்மதி மூலமான கண்காணிப்பு நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. தீவிரவாதக் குழுக்களிடமிருந்து வரும் எந்தவிதமான அச்சுறுத்தல்களையும் கண்காணிப்புச் செய்மதிகள் உடனடியாகவே தரையிலுள்ள கண்காணிப்பு ஒருங்கிணைப்பு மையத்தின் திரையில் காட்டிக் கொடுத்துவிடக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி பாதுகாப்பு அதிகாரிகள் கையிலுள்ள கையடக்கக் கருவிகள், பொலிஸ் காரிலுள்ள கருவிகள் மூலமும் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கின்றனர் என்பதையும், கட்டுப்பாட்டு நிலையத்திலுள்ள அதிகாரிகள் அறிந்துகொள்ளமுடியும்.



ஒலிம்பிக்கிற்கான பாதுகாப்புக்கு மூன்று செய்மதிகள் 37 ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவில் கிரேக்கத்தின்மீது நிறுத்தப்பட்டுள்ளன. இவற்றின் உதவியினால் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும் பகுதியில் உடனடியாகப் பதில் நடவடிக்கையைப் பாதுகாப்பு அதிகாரிகளால் மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் செய்மதி தடவழி கண்காணிப்பு முறை விமானிகள், மாலுமிகள் மற்றும் கண்பார்வை அற்றவர்கள் ஆகியோருக்கும் உதவி வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரை விமர்சனம்

# வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்

முதல்முறையாக இயக்குநர் சரண், இசையமைப்பாளர் பரத்வாஜ், பிரகாஷ்ராஜ், ஸ்நேகா ஆகியோர் இணையும் படம் இது. படம் முற்றுமுழுதாகக் நகைச்சுவையை நம்பி எடுக்கப்பட்டிருக்கிறது.



வசூலிக்கமுடியாத கடன்களை முரட்டுத்தனமாக வசூலித்துக்கொடுக்கும் கமிஷன் முரட்டு ரௌடிக் கும்பலின் தலைவர் கமலஹாசன். அவருடன் பிரபு கருணாஸ் ஆகியோரும் இருக்கின்றார்கள். ஆனால், கமல் தன்னுடைய அப்பா, அம்மாவிடம் தான் டொக்டர் தொழில் பார்ப்பதாகக் கூறுகின்றார். அவரை நம்பவைப்பதற்காக ஒரு செயற்கை மருத்துவமனை உருவாக்கப்படுகின்றது.

இதேவேளை - நாகேஷ் தன்னுடைய பழைய நண்பர் பிரகாஷ்ராஜின் மகள் சிநேகாவினைப் பெண் கேட்கின்றார்.



கமல் ஸ்நேகாவிடம் தன்னைப் பிடிக்கவில்லை என்று கூறுமாறு கேட்கின்றார். இதனை விளையாட்டாக ஸ்நேகா எடுக்கின்றார். ஆனால், கமல் பற்றிய உண்மை பிரகாஷ்ராஜிற்கு தெரிய, அவர் கமல் மற்றும் நாகேஷினை அவமானப் படுத்தியனுப்பி விடுகின்றார்.


ரௌடியான கமல் - தில்லு முல்லுகள் பல செய்து மருத்தவக் கல்லூரிக்கு நுழைகின்றார். அவர் எப்படி மருத்துவக் கல்லூரியில் பிரகாஸ்ராஜினை சமாளித்தார். ஸ்நேகாவின் காதலை எப்படி வென்றார் என்பதுதான் மீதிக்கதை. ரௌடி மாணவனாகிய கமலுக்கு பெரிதாக படத்தில் வன்முறைக் காட்சிகள் இல்லை. நாகேஷ் சில காட்சிகளில் நெஞ்சைத் தொடக்கூடியவாறு வசனம் பேசி நடித்திருக்கின்றார். கருணாஸை படம் முழுக்கப் பாழாக்கியிருக்கின்றார்கள். மாளவிகா மிகச்சிறிய வேடத்தில் நடித்திருக்கின்றார். பாடல்கள் - வைரமுத்து. வெளிநாட்டில் எடுத்த பாடல்காட்சிகளில் ஏ.வெங்கடேஸின் ஒளிப்பதிவு நன்றாக இருக்கின்றது. கிரேஸிமோகன் நகைச்சுவை வசனங்களில் வெளுத்து வாங்கியிருக்கின்றார்.

"வசூல்ராஜா" வசூல் தருவார்.

- PNS -

# அதிகரிக்கும் டிஜிற்றல் மோகம்

பிரிட்டிஷ் மக்களிடையே டிஜிற்றல் மோகம் அண்மைக்காலத்தில் அதிகரித்து வருவதாக அந்த நாட்டுத் தொலைத் தொடர்புகள் தொடர்பான கண்காணிப்புக் குழுவொன்று மேற்கொண்ட ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது. கைத்தொலைபேசிகள், டி.வி.டி, நெட் போன்றவற்றின் பாவனை என்றுமில்லாதளவு அதிகரித்துள்ளதாகவும், இவற்றுடனான தமது நேரத்தைப் பிரிட்டிஷ் மக்கள் அதிகமாகச் செலவிட்டு வருவதாகவும் அந்த நிறுவனம் கூறியது.




தொலைபேசித் தொடர்பில்கூடத் தரைவழித் தொடர்பு தொலைபேசியைவிடக் கையடக்கத் தொலைபேசிகளின் பாவனையே அதிகரித்துள்ளது. பத்துப்பேருக்கு ஒன்பது பேராவது இந்தத் தொலைபேசியைத்தான் பயன்படுத்துகின்றனர். வாரம் 55 ஆயிரம் புதிய இணைப்புகள் வழங்கப்படுகின்றது. இதுமட்டுமல்லாது வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றிலும் டிஜிற்றல் வகைத் தயாரிப்புகளுக்கே மதிப்பு அதிகரித்துள்ளது.



டிஜிற்றல் தொழில்நுட்ப முறையில் ஏற்பட்டுள்ள அபரிதமான வளர்ச்சியே எல்லாவற்றுக்கும் காரணம் எனக் கூறப்படுகிறது. டிஜிற்றல் தொழில்நுட்பத் துறையினால் பொதுமக்கள் அதிக சொகுசை உணரும்போது, அவற்றின் பாவனையும் அதிகரிப்பது தவிர்க்கமுடியாது. பிரிட்டிஷ் மக்களில் அரைப் பங்கினர் தம்வசம் டி.வி.டி பிளேயர்களை வைத்துள்ளனர் என, ஒரு தரவு தெரிவிக்கிறது. பிரிட்டிஷ் மக்கள் தமது வீட்டுப் பாவனைப் பொருட்களுக்கான செலவில் நான்கு சத வீதமானவற்றை டிஜிற்றல் பொருட்களுக்காகவே செலவிடுகின்றனர்.

நெட் மூலமான தொடர்புகள் அதிகரிக்கும் வேகத்தை நோக்கும்போது, அடுத்த மாதத்தில் இது 5 மில்லியனாக அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளது.

# பிரிந்தவர் கூடினால்... கூடியவர் பிரிந்தால்...!



சமூகக் கூட்டமாகக் கடலில் வாழும் டொல்பின் மீன்களில் தனி ஒரு மீன் பிடிபட்டுவிட்டாலோ அல்லது இறந்துவிட்டாலோ அது அங்கம் வகித்த கூட்டம் பல கூட்டமாகச் சிதறுண்டு பிரிந்து சென்றுவிடுவதாக நியூஸிலாந்தில் இந்த மீனினத்தின் வாழ்க்கை வட்டத்தை ஆராய்ந்த உயிரியலாளர்கள் கூறுகின்றனர்.

செயற்கையாக இவை வளர்க்கப்படும் இடங்களில்கூட ஒரு டொல்பின் மீனை இந்தக் கூட்டத்திலிருந்து அகற்றிவிட்டால், எஞ்சிய ஏனைய டொல்பின்கள் மத்தியில் பதகளிப்பு ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.


டொல்பின் வாழ்க்கை முறைகளை ஆராய்ந்துவரும் அபடீன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சூழலியலாளர் டேவிட் லுசேயூ தாம் நேரில் அவதானித்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகையில் - ஒரு முறை ஒரு டொல்பின் கூட்டத்திலிருந்து இரண்டு தனி டொல்பின்கள் காணாமற்போனதைத் தொடர்ந்து, அவை இருந்த டொல்பின் கூட்டம் இரண்டு தனித்தனிக் கூட்டமாகப் பிரிந்து தத்தம்பாட்டில் வெவ்வேறு திசைகளில் சென்றன.

எனினும், அந்த இரண்டு டொல்பின்களும் மீண்டும் திரும்பிவந்ததும், பிரிந்த இரண்டு கூட்டங்களும் இணைந்து, மீண்டும் ஒரே சமூகக் கூட்டமாக இயங்கின என்கிறார்.

இவரின் இந்த அவதானிப்புகள் பிரிட்டனின் ரோயல் சொசையிட்டி அமைப்பின் சஞ்சிகையில் வெளிவரவுள்ளது.

# சோம்பேறிகளை சுறுசுறுப்பாக்க

மரபணுச் சிகிச்சைமூலம் சோம்பேறிகளாக இருக்கும் குரங்குகளைச் சுறுசுறுப்பானவையாக மாற்றும் முயற்சியில் அமெரிக்க விஞ்ஞானிகள் வெற்றிகண்டுள்ளனர். வழமையாகக் குரங்குகள் தமக்குச் செய்யும் வேலைக்காக 'பரிசு' கிடைக்கும் எனத் தெரிந்தால் மட்டுமே சுறுசுறுப்பாக இயங்கும். ஆனால், இந்த மரபணுச் சிகிச்சைமூலம் அவை எந்தநேரமும் சுறுசுறுப்பாகவே இயங்கும் என்பதை இந்த ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர்.



வோஷிங்டனிலுள்ள மனநிலை ஆய்வுக்கான தேசிய நிறுவகத்தைச் சேர்ந்த டொக்டர் பெரிச்மன்ட் தலைமையிலான குழுவினரே இந்த ஆய்வில் வெற்றிகண்டுள்ளனர். வழமையாகத் தம்மை நோக்கி உணவோ, ஏதும் பரிசோ கொண்டுவரப்படுகின்றது என்பதை அறிந்தால் மட்டுமே குரங்குகளும் மனிதர்கள்போல் சுறுசுறுப்பாகச் செயற்பட ஆரம்பிக்கும் என்கிறார் டொக்டர் ரிச்மன்ட்.


இந்தச் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவது மூளையிலுள்ள ஓர் இரசாயனப் பதார்த்தமான **Dopamine** ஆகும். ஆனால், மரபணுச் சிகிச்சையின்போது இந்த இரசாயனப் பதார்த்தத்தின் சுரப்பு கட்டுப்படுத்தப்படுகிறது. இதனைக் குரங்குகளில் வழமையாகக் காணப்படும் இந்தச் செயற்பாடு இல்லாமற்போய்விடுகிறது. எந்தநேரமும் சுறுசுறுப்பாகவே அதைத் தொழிற்பட வைக்கிறது. எனினும், இரண்டு வாரங்களின்பின்னர் இந்தக் கட்டுப்பாடு அற்றுப்போனதும் குரங்கு தனது பழைய வழமையான செயற்பாட்டுக்கே திரும்பிவிடும்.

ஆனால், இந்தமுறை மூலம் மனிதரில் ஏற்படும் மன அழுத்த நோய், படபடப்புப் போன்ற நிலைமைகளை ஒரு காலத்தில் கட்டுப்படுத்தக் கூடியநிலை வரலாம் என்கிறார் டொக்டர் ரிச்மன்ட். ஆனால், ஒன்று இதுபற்றி அறியும் முதலாளிமார்களும் தமக்குக் கீழே பணிபுரியும் ஊழியர்களுக்கும் இந்தச் சிகிச்சையை வழங்குமாறு கோரும் அவலமும் ஏற்படலாம் என்கிறார் ரிச்மன்ட் நகைச்சுவையாக.

# பிரிட்டனில் புதியவகை அடையாள அட்டை

மனிதமுகம், கண், கைரேகை என்பவை மீதான உயிரியல் கணிப்பீட்டுமுறை மூலமான நுணுக்கமான ஆய்வின்மூலம் பெறப்படும் தகவல்களைக் கொண்டே இனிப் பிரிட்டிஷ் பிரஜைகளுக்கான ஆள் அடையாள அட்டைகள் தயாரிக்கப்படவுள்ளது.

பதினைந்து நிமிடநேர ஆய்வுகளின் பின்னர், உடனடியாக ஒருவரின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். 2007 ஆம் ஆண்டுமுதல் இத்தகைய உயிரியல் ஆய்வு அங்க அடையாளங்கள் பதிவுசெய்யப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம், கடவுச்சீட்டு என்பன பாவனைக்கு வரவுள்ளது. அடுத்த ஆறு வருடங்களில் அவை கட்டாயச் சட்டத்தின்மூலம் அமுலுக்குக் கொண்டு வரப்படும். இந்த ஆய்வு முறையில் காலம் செல்லச்செல்ல புதிய முறைகளும் அமுலுக்கு வரலாம் என்பதை மறுப்பதற்கில்லை என்கிறார் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சைச் சேர்நத வில்சன்.



இந்தத் திட்டத்தில் அடையாள அட்டை பெறச்செல்லும் ஒருவரின் முக அங்கலட்சணங்கள் உயர் தொழில்நுட்பக் கமராமூலம் பிளாஷ் இன்றி பல கோணங்களில் சேகரிக்கப்படும். இவ்வேளைகளில், வழமைபோல புகைப்படங்களுக்குப் போஸ் கொடுக்கும்போது, புன்முறுவல் செய்வதுபோன்று முகத்தின் வடிவத்தில் மாற்றங்கள் செய்ய முடியாது. ஏனெனில், முகத்தின் ஒவ்வொரு மேடு பள்ளங்களும் கமராமூலம் துல்லியமாக அளந்து எடுக்கப்படும். கமராவைக் கண்ணருகில் கொண்டுவரும்போது கண்சிமிட்டுவதும் தடைசெய்யப்படும்.

ஒரு நிமிடத்தில் இந்தப் பணிகள் பூர்த்தியானதும். அங்குள்ள கருவியொன்று சமிக்ஞை மூலம் "வேலை" முடிந்துவிட்டதாக அறிவிக்கும். கைவிரல்கள் ஒரு கண்ணாடித் தட்டின்மீது வைக்கப்பட்டு ஸ்கான் செய்யப்படும். விரல் அடையாளங்கள் கணினிமூலம் பதிவு செய்யப்படும். இறுதியில் விண்ணப்பதாரியின் கையொப்பம் பெறப்பட்டு அது இலத்திரனியல் முறையில் சேகரித்து வைக்கப்படும். சில நிமிடங்களினுள் வழங்கப்படும் சிறிய அடையாள அட்டையில் பதிக்கப்பட்டிருக்கும் **Microchip** இல் எமது அனைத்து விபரங்களும் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி மண்ணின் பெருமையை உலகறியச் செய்தவர் அமரர் ஆறுமுகம் கந்தையா

## நினைவஞ்சலி நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர்

(கைதடி)

சகோதர மதத்தினரது பாடசாலையில் கல்விகற்றபோதும் கூட, அந்தப் பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்களினது ஒத்துழைப்பைப் பெற்றுத் தமிழ்மொழி மற்றும் சைவ சமய விழாக்களை ஏற்பாடு செய்து சிறப்புற நடத்தி வெற்றிகண்டவர் அமரர் குலபதி ஆறுமுகம் கந்தையா.

மாணவப் பருவத்திலே அவரிடம் இருந்த அந்தச் செயலூக்கமும், மதப்பற்றுமே இன்று எங்களது கைதடி மண்ணின் பெருமையை உலகறியச் செய்துள்ளது என்று தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சத்தியநாதன் தெரிவித்தார்.

கைதடி கிழக்கு வீரமாகாளி அம்மன் கோயில் முன்றலில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில், தலைமை வகித்துப் பேசிய உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில் -

அமரர் ஆறுமுகம் கந்தையாவும் நானும் ஒரே பாடசாலையில் கல்வி கற்றவர்கள். அது ஒரு சகோதர பாடசாலை ஆகும். அங்கே சைவசமயத்துடன் தொடர்பான நிகழ்வுகள் எதனையும் செய்ய எமக்கு ஆரம்பத்தில் அனுமதி கிடைக்கவில்லை.

இருந்தும் குலபதி மாணவராக இருக்கும்போதே அன்று அந்தப் பாடசாலை நிர்வாகத்துடன் பேசி, அங்கு நவராத்திரி உள்ளிட்ட சமய நிகழ்வுகளை நடத்த வழிவகை செய்ததோடு, பாடசாலையை விட்டு நாங்கள் விலகும் வரை வருடா வருடம் அந்த நிகழ்வுகளை ஒழுங்காக நடாத்தியும் வந்தார்கள்.

பாடசாலையில் இருந்து விலகிய காலத்தில் 1968 ஆம் ஆண்டுகளில் கைதடி இந்து வாலிபர் மன்றத்தை உருவாக்கி, அதனைத் திறம்படச் செயற்படுத்தியும் வந்தார்கள்.

எமது சைவச் சிறார்களின் நல்வாழ்வுக்காக ஒரு சிறுவர் இல்லத்தை அமைக்கவேண்டுமென, 1968 ஆம் ஆண்டுகளிலே தனது முயற்சிகளைத் தனியாகவே தொடங்கி, என்னைப் போன்ற பல இளைஞர்களைத் தன்னோடு இணைத்து இந்தக் கைதடி சிறுவர் இல்லத்தை அமைக்க அரும்பாடுபட்டார்.

அவர் எடுத்த பெரும் முயற்சியின் பயனாக அன்று யாழ்ப்பாணத்தில் இருந்த பல பெரியோர்களின் ஒத்துழைப்புக் காரணமாகவும், 1975 ஆம் ஆண்டுகளில் கைதடி சைவச் சிறார் இல்லம் இயங்கத் தொடங்கியது.

1975 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் இந்துசமய மாநாட்டினை, கைதடி சைவச் சிறார் இல்லத்திலே நடத்தி, இலங்கையில் அனைத்துப் பிரிவுகளிலிருந்தும் பேராளர்களை வரவழைத்ததுடன், இந்தியா, மலேசியா போன்ற நாடுகளிலிருந்தும் பேராளர்களை வரவழைத்து - அந்த மாநாட்டினைச் சிறப்பாக நடத்தி முடித்தவர் இவராவார்.

எப்பொழுதும் இவரது மனமும், சொல்லும், செயலும்- சைவத்தையும், தமிழையும்தான் சுற்றிச் சுற்றி நிற்கும். அது காரணமாகவே அவரைப் பற்றியும், அவருக்கூடாக இந்தக் கைதடி மண்ணைப் பற்றியும் உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் இன்று தெரியக்கூடியதாக இருக்கின்றது.

நான் அறிந்த வரையில் 1968 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழுக்காகவும், சைவத்துக்காகவும் தொண்டாற்றிவந்த அமரர் கந்தையா -

சைவசமய நூல்கள் மட்டுமன்றி- சிறுவர், குழந்தைகளுக்கான நீதி நூல்கள், அரிச்சுவடிகள் ஆகியவற்றையும் வெளியிட்டு கல்வி உலகிற்குப் பல சேவைகளையும் புரிந்துள்ளார்.

தனது நோயின் தன்மையை அறிந்து சிகிச்சைக்காக வெளிநாடு செல்லும் தறுவாயில்கூட, அவர் தனது நண்பர்களது வீடுகளைத் தேடிச்சென்று சந்தித்தவேளை, சைவ சிறுவர் இல்லம் மீண்டும் கைதடியில் முன்னரைப்போல சிறப்பாக இயங்க வேண்டும் என்றும், சிறுவர் இல்ல மண்டபத்திலே வைக்கப்பட்டிருந்த நடராஜப் பெருமான் சிலை மீண்டும் அங்கு வைக்கப்பட்டு, பூசைகள் சிறப்புற நடைபெற வேண்டும் என்றும், அதுவே தனது ஆசை எனவும் கூறிச் சென்றார்.

தனது இறுதி மூச்சுவரை தமிழுக்கும், சமயத்துக்கும் என்றே வாழ்ந்த அமரர் குலபதியை - கைதடி மண் என்றும் இலகுவில் மறந்துவிட முடியாது என்று குறிப்பிட்டார். (31)

### புதிய வீதி

(அராலி)

அராலி வடக்கு - பெரியதம்பிரான் ஆலயத்துக்கு முன்பக்கமாக வீதி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த வீதியானது ஆலய பரிபாலன சபையினரதும், ஆலயத் தொண்டர்களினதும் உதவியினால் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த பல வருடகாலமாக இந்த ஆலயத்துக்கு வீதி இல்லாமல் வயல் வரம்புகளினூடாகச் சென்று அடியார்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (118)

### ஊர்காவற்துறை சங்கத்தில் திருட்டு

நாரந்தனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 8 ஆம் இலக்க கிளையின் ஓடுகளைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் - இனிப்பு வகைகள், கொப்பிகள், சீனி, அரிசிமூட்டை என்பவற்றைத் திருடிச்சென்றுள்ளனர்.

இது குறித்து ஊர்காவற்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (51)



பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கிராமியக் கலைப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு பேராசிரியர் சவச்சந்திரன் கௌரவிப்பதை படத்தில் காணலாம்.. (91)

### விவசாயிகளுக்கு வதிவிடப் பயிற்சி

விவசாயத் திணைக்களத்தினால் விவசாயிகளுக்கான வதிவிடப் பயிற்சி நெறி ஒன்று வழங்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறி - நிகொட் நிறுவனத்தின் அனுசரணையுடன் திருநெல்வேலி விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் செம்ரெம்பர் 2, 3, 4 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் கரவெட்டி, பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து 40 விவசாயிகள் கலந்துகொள்ளவுள்ளனர் என பருத்தித்துறை விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் வி.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (14)

# தண்ணீர்ப் பந்தலுக்கு கட்டடம் அமைக்க முயற்சி

(ஆனைவிழுந்தான்)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் மஹோற்சவ காலங்களில், ஆனைவிழுந்தான் சந்தியில் கடந்த 25 வருடங்களாக தண்ணீர்ப்பந்தல் அமைத்து, தாகசாந்தி அளித்து வந்த புலோலி இளைஞர்கள் -இந்த முறை மஹோற்சவ காலத்துக்கு முனபாக நிரந்தர கட்டடம் அமைக்கத் தீர்மானித்துள்ளனர்.

இதற்கான நிதி முழுவதையும் புலோலியைச் சேர்ந்த தனியார் ஒருவர் கொடுத்து இந்தக் கட்டடம் அமைப்பதற்கு முன்னின்று உழைக்கிறார்.

இந்தக் கட்டடம் அமைக்கும் வேலைகள் துரிதகதியில் ஆரம்பித்து நடைபெறுகின்றன.

அடுத்தமாதம் 13 ஆம் திகதி மஹோற்சவம் ஆரம்பிக்கு முன்னர் இந்தக் கட்டட வேலைகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (14)

# சிரித்திரன் சுந்தர் மலர் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் கனடாவிலிருந்து வெளிவரும் காலம்- இலக்கிய சஞ்சிகையின் சிரித்திரன் சுந்தர் மலரின் அறிமுகம், அதனைத் தொடர்ந்து கனடாவிலிருந்து வருகை தந்துள்ள காலம் சஞ்சிகையின் ஆசிரியர் செல்வத்துடனான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

எழுத்தாளர் க.சட்டநாதனின் தலைமையின்கீழ் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், எழுத்தாளர் அ.யேசுராசா, காலம் சஞ்சிகை பற்றிய அறிமுகவுரையை ஆற்றுவார்.

புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் இரா.சிவசந்திரன் காலம் சிரித்திரன் சுந்தர் மலரின் முதற்பிரதியை பெற்றுக்கொள்வார்.

## நல்லூர் ஆலயத்துக்கு

# பெறுமதியான ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூருக்கு வரும் பக்தர்கள்- பெருமளவான ஆபரணங்களை அணிநது வருவதையோ, அன்றிப் பொருட்கள் கொண்டு வருவதையோ தவிர்க்குமாறு, உற்சவகாலச் சிறப்புச் செயலகத்தினர் அறிவித்துள்ளனர்.

ஆலய சுற்றாடலில் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களுக்குச் சொந்தமான வாகனங்கள் பகல் வேளைகளில் மதியம் 12.30 மணி முதல் 2.30 மணிவரையே ஆலய வீதிக்குள் பிரவேசிக்க முடியும் எனவும் - கோயில் வீதி, அரசடி வீதி, பருத்தித்துறை வீதி, புது வீதி, செட்டியார் வீதி, கச்சேரி வீதி போன்றவற்றில் மின் விளக்குகள் இல்லாத இடத்தில் மின் விளக்குகள் பொருத்துமாறு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்கப்பட்டதுடன், இந்த வீதிகளில் அருகேயுள்ள பொது மக்கள் தமது வீடுகளுக்கு முன்பு மின் விளக்குகளை ஒளிர விடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதைவிட உற்சவகாலத்தில் கோயிலுக்கு அண்மையில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் நடமாட்டம் தொடர்பாக யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி, வடமாகாண பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு பேச்சுக்கள் நடத்தவுள்ளதாகத் தெரிவித்தனர்.

# வெளிச்சவீடு திருத்தப்படாததால் கடற்தொழிலாளர்கள் சிரமம்

குருநகர், பாசையூர் கிராமங்களுக்கு அண்மையில், யாழ்ப்பாணக் கடல் நீரேரியில் அமைந்துள்ள வெளிச்சவீடு - பல வருடங்களாகப் பழுதடைந்த நிலையிலுள்ளது. இரணைதீவு, பாலதீவுகளுக்கு அண்மையில் கடற்தொழிலுக்குச் செல்லும் குருநகர், பாசையூர், நாவாந்துறை, கொழும்புத்துறைக் கிராமங்களைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் கடந்தகாலங்களில் தொழில் முடிந்து அதிகாலைவேளையில் வெளிச்சவீட்டின் உதவியுடன் கரை திரும்பினர்.

வெளிச்சவீடு இல்லாமையால், அதிகாலைவேளை தாங்கள் கரைகளுக்குத் திரும்பமுடியாமலுள்ள கடற்தொழிலாளர்களின் நன்மைகருதி, வெளிச்சவீட்டைத் திருத்தி வெளிச்சம்போட இலங்கை துறைமுக அதிகாரசபையினருடன் தொடர்புகொள்ளும்படி குருநகர் அபிவிருத்திச் சங்கம், யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. (21)

### வீதி திருத்தப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் எல்லைக்குள் அமைந்துள்ள பண்டாரக்குள வீதி புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் தற்போது நடைபெற்றுள்ளது. இந்த வீதி மக்கள் பாவனை கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.(90)

### கௌரவிப்பு வைபவம்

வலி.வடக்கு பிரதேச மக்கள் ஆதரவில் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்துள்ள கௌரவிப்பு வைபவமொன்று இன்று காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி.வடக்கு செயலக நிர்வாக உத்தியோகத்தர் இராஜகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், கணேசன் விளையாட்டுக் கழக உறுப்பினர் சி.கமலமோகனும், யாழ். பிரதேச செயலக விளையாட்டு அதிகாரி செ.இரமணனும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

# பரீட்சை ஆணையாளருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

இலங்கை நிர்வாகசேவைப் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்படாமையைக் கண்டித்து, பரீட்சை ஆணையாளருக்கெதிராக மனித உரிமை மீறல் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மருதடி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வசிக்கும் இ.ஜோன்சன் என்பவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது - கடந்த 2001 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்குப் பட்டதாரிகளை உள்வாங்குவதற்கான பரீட்சை நடைபெற்றது.

அந்தப்பரீட்சை நடைபெற்று சில மாதங்களுக்குப் பின்னர் குறிப்பிட்ட சிலர் அந்தப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதாகத் தெரிவித்து, கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சியும் வழங்கப்படுகின்ற நிலையிலும் இதுவரை எவருக்கும் பெறுபேறுகள் அறிவிக்கப்படவில்லை.

பரீட்சையொன்று நடைபெற்றால் அதற்கான பெறுபேறுகளை அறிவிக்க வேண்டியது பரீட்சைத் திணைக்களத்தின் கடமை. ஆனால், பரீட்சைத் திணைக்களம் அந்தக் கடமையிலிருந்து தவறியுள்ளது.

எமது பெறுபேறுகள் எமக்குத் தெரியப்படுத்தப்படல் வேண்டும் எனத் தெரிவித்தே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# மருதங்கேணி - உடுத்துறை வீதி நீண்டகாலமாக திருத்தப்படவில்லை

(தாளையடி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்னால் செல்லும் மருதங்கேணி - உடுத்துறை வாரிவெட்டன் வீதி பலகாலமாகத் திருத்தப்படாமல் இருப்பதால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மக்கள் மீளக்குடியமர்ந்த பின்பும் இந்த வீதி திருத்தப்படாமல் இருந்துவருகிறது. இந்த வீதியால் செல்லும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இரண்டு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் - இந்த வீதியாலேயே செல்லவேண்டியுள்ளதால், மாணவர்கள் பாடசாலைக்கு நேரத்துக்குச் செல்லமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதி மிகவும் போக்குவரத்து நிறைந்த வீதி. அத்துடன் ஆழியவளை, உடுத்துறை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதியாகும்.

இந்த வீதி பற்றி எத்தனையோ தரம் சுட்டிக்காட்டியும், எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மீளக்குடியமர்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை*
*வீயாது அடியுறைந்து அற்று*

திருக்குறள்

# நமது நோக்கு

## மீண்டும் 1971 ஐ நோக்கி நகரும் ஜே.வி.பியினரின் செயற்பாடுகள்!

சமாதான முயற்சிகளை அதன் சகல வடிவங்களிலும் முற்றாக - முழுமூச்சாக எதிர்ப்பதென்பதில் தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. மிகவும் உறுதியாக உள்ளது என்ற விடயம் தற்போது மிகவும் தெளிவானதொன்றாகிவிட்டது. விடுதலைப்புலிகள் ஏற்கனவே முன்வைத்த இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பாக அரசு எந்த வகையிலும் பேசக்கூடாது என வலியுறுத்திவரும் ஜே.வி.பி.யினர், அதற்குப் பதிலாக அரசு தயாரித்துவரும் மாற்று யோசனைகளையும் நிராகரிப்பதாகவும் - அதன் அடிப்படையில் பேச்சுக்களை மேற்கொள்வதையும் ஜே.வி.பி. கடுமையாக எதிர்க்குமென்றும். கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும் ஜே.வி.பி.யின் அரசியல் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான கே.ரீ.லால்காந்த என்பவர் தெரிவித்துள்ளார்.

அவரின்இந்த நிலைப்பாடு இரு விடயங்களைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது. ஒன்று - ஜே.வி.பி. சமாதான முன்னெடுப்பு நகர்வுகளை இரு தரப்பினருக்கும் நம்பிக்கையூட்டும் வகையில் ஒரு படிமுறை வளர்ச்சிப் போக்கில் மேற்கொள்ளத் தயாராக இல்லை என்பதாகும். அடுத்தது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துள்ள கட்சிகளிடையே ஒரு பொதுவான புரிந்துணர்வுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபடும் தெளிவான கொள்கை உடன்பாடு கிடையாது என்பதாகும்.

குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பி.க்குமிடையே ஐ.தே. முன்னணி அரசை வீழ்த்துவதில்தான் ஒருமித்த செயற்பாடு இருந்ததே தவிர, ஏனைய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில்கூட அவர்களிடையே இணக்கமான ஒரு பொதுக் கொள்கையுடன்பாட்டுடன் கூடிய செயற்பாடு இருப்பதாகத் தெரியவில்லை.

வெறுமனே பதவிக் கதிரைகளில் இருந்து கொண்டு அதிகாரம் செலுத்தும் மனோபாவத்தை மட்டுமே கொண்ட அரசியல்வாதிகளினால் நாட்டின் எதிர்காலத்திற்கும் மக்களின் வாழ்வியல் உரிமைகளுக்கும் எப்போதும் ஆபத்து உருவாகும் அபாயம் இருந்து கொண்டேயிருக்கும் என்பதற்கு இலங்கையின் ஆட்சிபீடம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகவே உள்ளது.

ஒரு கூட்டணியில் இருந்து ஆட்சியை நடத்திவரும் பங்காளிகளாக இருந்த போதிலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பி.க்கும் இடையே மிகவும் சிக்கலானதும் உடன்பாடு காணமுடியாததுமான முரண்பாடுகள் நிறையவே உள்ளன என்பதை கடந்த நான்கு மாதகால ஆட்சியின் தாக்கங்கள் எதிரொலித்துக் கொண்டேயுள்ளது.

மற்றெல்லா விடயங்களையும்விட சமாதான முயற்சிகள் தொடர்பான விடயங்களில் இருகட்சிகளுக்குமிடையே உடன்பாடு ஏற்படுதல் என்பது சாத்தியமே கிடையாது என்ற நிலையில், ஜனாதிபதியால் இது தொடர்பாக இனி எந்த முடிவுக்கும் வரமுடியாத நிலை தொடரவே செய்யும் என்பதே ஆய்வாளர்களின் மதிப்பீடாகவும் உள்ளது.

பலவீனமான அரசின் மிகப்பெரிய பலம் தாங்கள்தான் என்ற மமதை ஜே.வி.பியினருக்கு மிக அதிகமாகவுண்டு. இதனடிப்படையில், அரசு தன்கைக்குள்தான் இருக்கிறது என்ற அகங்காரத்துடன், தனது செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் ஜே.வி.பியைக் கட்டுப்படுத்தும் வழி தெரியாமல் ஜனாதிபதி திணறுவது அவரின் அண்மைக்கால அறிவிப்புகள், அறிவுறுத்தல்கள் மூலம் தெளிவாகியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியை அச்சத்திலாழ்த்தும் அறிக்கையொன்றினை பொலிஸ் திணைக்களத்தின் இரகசிய அறிக்கைப் பிரிவு ஜே.வி.பியினரின் செயற்பாடுகள் மற்றும் அவர்களின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து அதிர்ச்சியூட்டும் மூன்று அறிக்கைகளை அவருக்கு அனுப்பிவைத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.


பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க மூலம் அனுப்பப்பட்ட இந்த அறிக்கைகளில்- ஜே.வி.பியினர் மீண்டும் ஆயுதக் கிளர்ச்சிக்குத் தயாராகி வருகிறார்களா என்பது குறித்தும், அவர்கள் வெளிநாடுகளூடாகப் பெற்றுக்கொள்ளும் உதவிகள் குறித்தும், தமது கட்சி உறுப்பினர்களை இராணுவத்தினுள் அதிகளவில் இணைத்துக் கொள்வது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாம்.

இது ஜனாதிபதிக்குப் பெரும் குழப்பத்தை உண்டுபண்ணியுள்ளதுடன், அவர் தான் எதிர்கொள்ள நேரிடக்கூடிய ஆபத்துக்கள் பற்றி அதிக எச்சரிக்கை கொள்ளவேண்டிய நிலையையும் அவருக்கு உருவாக்கியுள்ளது.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள நினைக்கும் ஜே.வி.பியினர், தமக்கு இப்போது அரசாங்கத்திலுள்ள பலத்தைப் பயன்படுத்தி, தமது எதிர்கால அரசியல் இலக்குகளை அடையும் திட்டங்களில் தீவிரமாக இயங்கத் தொடங்கியுள்ளதாகத் தென்பகுதிச் செய்திகள் தெரிவிக்கின்றன. பேரினவாதிகளை, பௌத்தமதவாதிகளை தன்வயமாக்கிக் கொள்ளும் நோக்குடனேயே சமாதான முயற்சிகளை எதிர்க்கும் ஜே.வி.பி பௌத்த சிங்கள மக்களின் கலாசாரத்தை - அரசியல் உரிமையை- அவர்களின் தேசியத்தைப் பாதுகாக்கும் ஒரே சக்தியாகத் தன்னைத் தென்பகுதி மக்களிடையே, இனங்காட்டுவதில் தீவிரம் காட்டிவருகிறது.

இது ஏனைய சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளுக்கு சவாலானதும், ஆபத்தானதுமாகும். உண்மையில் ஜே.வி.பியின் இந்த இலக்கே சமாதானத்தை முற்றாக எதிர்க்க வைக்கிறது. எனவே, ஜே.வி.பியை வைத்துக்கொண்டு ஜனாதிபதி சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதென்பது எந்தவகையிலும் சாத்தியமே கிடையாது.

# நாடும் நடப்பும்




# தமிழீழ விடுதலைப்புலிகள் 21 பேருக்கு நோர்வே இராணுவம் பயிற்சி வழங்கியதாம்

## - புளொட் பிரதிநிதி குற்றச்சாட்டு

இலங்கையின் சமாதானச் செயற்பாடுகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நோர்வேக்குச் சென்ற விடுதலைப்புலி உறுப்பினர்கள் 21 பேருக்கு, நோர்வேயின் றேனோ எனும் விசேட இராணுவப் படையணியின் பயிற்சியைப் பெறுவதற்கு எரிக் சொல்ஹெய்ம் உதவியதாக, புளொட் அமைப்பின் நோர்வே பிரதிநிதி ராஜன் என்பவரால் நோர்வே பாதுகாப்பு உளவுப்பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எரிக் சொல்ஹெய்ம் இலங்கையின் சமாதான செயற்பாடுகள் பற்றி இலங்கை அரசுக்கும் - விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இடையே நடுநிலையாளராக நின்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோர்வே நாட்டின் சமாதானப் பிரதிநிதியென்றும், அப்படிப்பட்ட ஒருவர் இப்படியான நடவடிக்கையில் ஈடுபட்டது பற்றியும் தமது எதிர்ப்பை ராஜன் வெளிப்படுத்தியது நோர்வே அரசின் பாதுகாப்பு உளவுப்பிரிவில் முறைப்பாடு செய்ததன் பின்னர் வெளியாகியுள்ளதாம்.

இவ்வாறு புலிகள் அங்கத்தவர்கள் இராணுவ முகாமில் பயிற்சி மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களும் வெளியாகியுள்ளதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

## ஒரு தொகுதி அடையாள அட்டைகள் யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைப்பு!

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு ஜூலை மாதம் அனுப்பிவைக்கப்பட்ட ஐநூற்றியொரு அடையாள அட்டைகள் நேற்று யாழ். செயலகத்தில் இயங்கும் ஆட்பதிவுத் திணைக்களத்துக்குக் கிடைக்கப்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்துக்குரிய இரண்டாயிரத்து ஐநூறுக்கும் அதிகமான தபால் பொதிகள் வவுனியா தபாலகத்தில் கடந்த வருடம் முதல் தேங்கிக்கிடந்தன. அவை கடந்த 10 ஆம் திகதி கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தன.

அவற்றை விநியோகிக்கும் பணிகளை யாழ்.பிரதம தபாலகம் ஆரம்பித்துள்ள நிலையில் 501 தேசிய அடையாள அட்டைகள் நேற்று யாழ்.செயலக ஆட்பதிவுத் திணைக்கள அலுவலகத்துக்குக் கிடைத்துள்ளன.

மேலும் அடையாள அட்டைகள் தபால் பொதிகளுள் இருக்க வாய்ப்பிருப்பதாகவும், அவை கிடைக்கப்பெறும்போது உடனுக்குடன் அந்தந்தப் பகுதி உதவி அரச அதிபர் பணிமனைகளினூடாக கிராம சேவையாளருக்கு விநியோகிக்கப்பட்டு, உரியவர்களின் கைகளில் சேர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## நல்லூர் செங்குந்தா வீதி செப்பனிடப்பட்டு வருகிறது!

நல்லூர் செங்குந்தா வீதியானது பலகாலமாகத் திருத்தப்படாத நிலையில் காணப்பட்டது. இதனால், அந்த வீதியால் பயணிக்கும் மக்களும், செங்குந்தா இந்துக்கல்லூரி மாணவர்களும் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். தற்போது இந்த வீதி நல்லூர்ப் பிரதேசசபையினரால் செப்பனிடப்படுவதையிட்டு மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இதன் முதற்கட்டமாக நல்லூர் வாலையம்மன் கோயிலிலிருந்து வெள்ளைப் பிள்ளையார் கோயில் வரையிலான பகுதி செப்பனிடப்பட்டுள்ளது. இந்த வீதியின் ஏனைய பகுதிகள் விரைவில் செப்பனிடப்பட்டு முடிந்துவிடும் என நல்லூர்ப் பிரதேசசபையினர் தெரிவித்தனர்.

அண்மையில் இந்த வீதி சம்பந்தமான செய்திகளை நமது ஈழநாடு வெளியிட்டிருந்தமை தெரிந்ததே.

## வெடிபொருட்கள் அகற்றும் பணி ஆவரங்காலில் இடைநிறுத்தம்

பொதுமக்களின் போதிய ஒத்துழைப்பின்மையால் ஆவரங்கால் பகுதியில் வெடிபொருள் அகற்றும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

புத்தூர் பிரதேசத்திலுள்ள ஆவரங்கால் பகுதியில் இராணுவ வெடி பொருளகற்றும் பிரிவினரின் நடவடிக்கையே கடந்த மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து யாழ்ப்பாண செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினர் தெரிவித்துள்ளதாவது-

ஆவரங்கால் பகுதியில் இராணுவ வெடிபொருள் அகற்றும் பிரிவினர் வெடிபொருள் அகற்றும் பணியில் ஈடுபட்டு வந்த போதிலும், அந்தப் பகுதி மக்கள் அவர்களது பணிக்கு ஒத்துழைப்பு வழங்காது செயற்பட்டுள்ளனர்.

வெடிபொருள் அகற்றுவதற்காக அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் இருந்து அடையாளக் கட்டைகள் அகற்றப்பட்டுள்ளன. வெடிபொருள் அபாய அறிவுறுத்தல் பலகைகள் அகற்றப்பட்டுள்ளன. அத்தோடு அடையாளப் பலகைகள், தடிகள் போன்றவற்றுடன் நாடாக்களும் இரவு வேளைகளில் அகற்றப்பட்டு வந்துள்ளன.

இதனையடுத்தே இராணுவத்தினர் அந்தப் பகுதியில் வெடிபொருளை அகற்றுவதை நிறுத்திவிட்டு அரியாலை, தனங்கிளப்பு, தென்மராட்சியின் வேறு சில பகுதிகளிலும் வெடிபொருள் அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தவாரம் அரியாலையில் வெடிபொருள் அகற்றப்பட்ட ஒருபகுதி நிலத்தை இராணுவ வெடிபொருள் அகற்றும் பிரிவினர் யாழ். அரச அதிபரிடம் கையளிக்கவுள்ளார்கள் எனத் தெரியவருகிறது. (ப)

# ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பியதும் கூட்டமைப்பு நிறைவேற்றுக் குழு கூடும்

லண்டனுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பியதும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக்குழுவை அழைத்துத் தற்போது நாட்டில் நிலவும் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஆயத்தமாகவிருப்பதாக, ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

விசேடமாக சமாதான செயற்பாடுகளோடு, சமாதான செயற்பாடுகள் தொடர்பாக ஜே.வி.பி மீது தொடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் [illegible] வதற்கு நிறைவேற்றுக்குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதிக்கு மிக நெருங்கிய மூத்த அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே இந்த நிறைவேற்றுக் குழுவைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு மேலதிகமாக சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதைப் போன்று வாழ்க்கைச்செலவு உயர்வு பற்றியும் இந்தக் கலந்துரையாடலின்போது பேசுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களின் பின்னர் ஜனாதிபதி நாடு திரும்பியதும் சுதந்திர முன்னணித் தலைவர் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவின் தலைமையில் நிறைவேற்றுக்குழு கூடும் எனவும் ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் தெரிவித்தார். (தே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் நோக்கு... - சிலம்பு

# தமிழ் மக்கள் தமது உரிமைகளை நிலை நாட்டவே விரும்புகின்றார்கள்





விடுதலைப் புலிகள் நெகிழ்வுப் போக்கைக் காட்ட வேண்டும் என்கின்றார் மங்கள சமரவீர. புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வரவேண்டும் என்கின்றார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இரத்தினசிறி விக்கிரம நாயக்கா, தற்பொழுது மாற்றுத் திட்டம் ஒன்று ஜனாதிபதியால் தயாரிக்கப்படுவதாகவும், புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையுடன் ஜனாதிபதியின் புதிய யோசனையையும் வைத்துப் பேசலாம் என்கிறார். அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபாலா இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொல்லிக் கொண்டு இருப்பது காலத்தைக் கடத்தும் செயலாகத் தான் தெரிகின்றது.

உரிமைகள் பறிக்கப்பட்ட இனம் தன் உரிமைகளை நிலைநாட்டப் புறப்பட்ட வேளையில் ஆயுதத்தால் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையில் ஆயுதம் ஏந்திப் போராடி இன்று வலுவான நிலையில் இருக்கும் பொழுது நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்கும்படி கூறுகின்றார் அமைச்சர் மங்கள சமரவீர. நெகிழ்வுப் போக்கு என்றால் என்ன? என்பதுதான் கேள்வியாகும்.

1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவினால் நிறைவேற்றப்பட்ட பின்னர் திருமலையில் தமிழரசுக் கட்சியின் மாநில மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டுக்குத் தமிழ் மக்கள் தமது பகுதிகளிலிருந்து நடை பயணமாகச் சென்றனர். வரலாற்றில் இது திருமலை யாத்திரை என்று பதிவாகி இருந்தது. இந்த மாநாட்டில் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதற்கு ஓராண்டு அவகாசம் ஆட்சியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டது. தமிழ் மக்களின் உரிமைகள் இவ்வோராண்டுக்குள் வழங்கப்படாவிட்டால், சிங்கள அரசுடன் ஒத்துழையாமை இயக்கம் நடத்தி அறப்போர் தொடங்குவது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை முதலில் பெரிதாக எடுத்துக் கொள்ளாத பண்டார நாயக்கா தந்தை செல்வாவின் ஆயத்த ஏற்பாடுகளைக் கண்டு, பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். தந்தை செல்வாவுக்கும், பிரதமர் பண்டார நாயக்காவுக்குமிடையிலான பேச்சுவார்த்தை இறுதியில் பண்டா - செல்வா ஒப்பந்தம் என்ற ஏற்பாட்டில் 1957 இல் நிறைவடைந்தது. இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது தந்தை செல்வா இணைப்பாட்சியே வேண்டும், இதற்குக் குறைவான எதையும் ஏற்க மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கவில்லை. மாறாகப் பிரதேச சபைகளை ஏற்றுக் கொண்டார். அதாவது நெகிழ்வுப் போக்கைத் தமிழர் தரப்பு கைக்கொண்டது. இந்த பிரதேச சபை இணைப்பாட்சிக்கு முதல்படி என்று தந்தை செல்வா கூறினார், நம்பினார். ஆனால் 1958 இல் பண்டாரநாயக்கா தான் எழுதிய ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார்.

இதன் பின்னர் 1965 இல் டட்லி சேனநாயக்க தனது கட்சி ஆட்சி அமைக்க உதவிடுமாறு தந்தை செல்வாவை நாடிய பொழுது நெகிழ்வுப் போக்கைக் கைக்கொண்டவர்.

தந்தை செல்வா, ஆம் இணைப்பாட்சியை வலியுறுத்தவில்லை. தந்தை செல்வா. பிரதேச சபைகளையும் வலியுறுத்தவில்லை அவர். மாவட்ட சபைகளை ஏற்பதாக டட்லியுடன் ஒப்பந்தம் ஏற்பாடாகிறது. ஆனால், மாவட்ட சபைகள் தருவதாகக் கூறிய டட்லி வெறும் மாவட்ட சபைகள் வெள்ளை அறிக்கையுடன் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டார்.

> **சமாதானத்துக்காகச் சண்டை என்று கூறிக் கூறி தமிழினத்துக்கு எதிராக நடத்திய போர் அனர்த்தங்களை மக்கள் மறக்க வில்லை. அதனால் சமதானத்துக் கான சண்டை சந்திரிகாவின் தயார்ப் படுத்தலாகவும் இருக்கலாம். எனவே இத்தீவில் சண்டையா? சமாதானமா? என்று ஆட்சியாளர்கள் தீர்மானிக்கப் போகின்றார்கள். தமிழ்மக்கள் தமது உரிமைகளுக் காக எதனையும் இழக்கத் தயாராகிவிட்டனர். தமிழ் மக்கள் எதனையும் விட்டுக் கொடுக்கவும் தயா ராகி விட்டார்கள். ஆனால் தமது உரிமைகளைத் தவிர.**

தமிழ் மக்கள் எவ்வளவோ நெகிழ்வுப் போக்குடனும், விட்டுக் கொடுப்புடனும் நடந்த பொழுதும், சிங்களத் தலைமைகள் நெகிழ்வுப் போக்கைப் பின்பற்றாதது மட்டுமல்ல, எழுதிய ஒப்பந்தங்களைக் கிழித்தெறிந்ததுடன், தமிழ் மக்களது உரிமைகளை ஒட்டுமொத்தமாகப் பறிக்கவும் செய்தனர். இவ்வாறு உரிமைகள் பறிக்கப்பட 1972, 1978 ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்புக்களாகும்.

இந்த யாப்புக்கள் மூலம் தமிழ் மக்களை, அவர்களது பண்பாட்டை, நிலத்தை நிரந்தரமாக்க அபகரித்து அழிக்கச் சிங்களம் முனைப்புடன் செயற்பட்டது. தமிழ் மக்கள் தமது பிறப்புரிமையை, தமது உரிமையை நிலைநாட்ட முற்பட்ட பொழுது பயங்கரவாதிகளாகச் சித்தரித்துக் காட்டப்பட்டனர். ஆனால் இலங்கைத் தீவிலே இரு நாட்டினங்கள் வாழ்வதையும் இருபெரும் இராணுவங்கள் இருப்பதையும் விடுதலைப் புலிகள் உலகுக்குக் காட்டி நின்றனர்.

இந்த நிலையில்தான் யுத்த நிறுத்தம் 2002 இல் புலிகளால் ஒரு தரப்பாக அறிவிக்கப்பட்டது. புலிகள் தமிழீழத்தை வலியுறுத்தவில்லை. தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப பேசத் தயார் என்றனர். தமிழீழம் பற்றித் தான் பேசுவோம் என்று அடம்பிடிக்கவில்லை. உண்மையில் நெகிழ்வுப் போக்கைப் புலிகள் காட்டி நின்றனர்.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு முன்னர், தமிழ் மக்கள் யுத்த நிலையிலிருந்து விடுபட்டு, அமைதியான சூழலில் வாழ, தமது பகுதியை அபிவிருத்தி செய்ய ஒரு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வேண்டும் என்றும், அதன் பின்னர் நிரந்தரத் தீர்வு பற்றிப் பேசுவோம் என்றனர். இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியாலும், சந்திரிகா கட்சியாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளேயாகும். அதாவது நெகிழ்வுப் போக்கைக்காட்டிப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வந்ததை உலகம் வியந்து பார்த்துக் கொண்டிருக்கையில், புலிகளைப் பற்றிய உண்மை நிலையை உலகம் உணர்ந்து விட்ட நிலையில் புலிகளைப் பற்றித் தவறான காட்சியைக் காட்டுவதற்காகப் புலிகள் நெகிழ்வுப் போக்கைக் காட்ட வேண்டும் என்கிறார் மங்கள சமரவீர. பேச்சுவார்த்தைக்குத் தயாரெனப் புலிகள் கூறி சண்டை நிறுத்தம் செய்ததை மறைப்பதற்காக புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவரவேண்டும் என்று கூறுகின்றார் இரத்தினசிறி விக்கிரம நாயக்க.

இதற்கும் மேலாக வேறு ஒரு குரல் தற்பொழுது கேட்கின்றது. சந்திரிகா பலமில்லாத நிலையில் உள்ளார். ஜே.வி.பி. சந்திரிகாவை பலமிழக்கச் செய்கின்றது. சந்திரிகா பேச்சுவார்த்தைக்கு வரத் தயாராயுள்ளார். எனவே, தமிழர் தரப்பு கொஞ்சம் விட்டுக் கொடுப்புடன் நடக்கவேண்டும். தமிழர் தரப்பு விட்டுக் கொடுத்துச் சந்திரிகாவின் கைகளைப் பலப்படுத்தினால் ஜே.வி.பி.யினரின் மிரட்டலை குறைக்கலாம் என்ற புதியகுரல் தற்பொழுது கேட்கத் தொடங்கியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடந்த பொழுது அதைக் குழப்பவும், ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கவுமே சந்திரிகாவும், ஜே.வி.பி.யும் நெருங்கிக் கை கோர்த்தனர். எனவே ஏதோ புதிதாக ஜே.வி.பி.யினரின் அச்சுறுத்தல் ஏற்பட்டதாகத் தெரிவிப்பது ஒரு ஏமாற்றுவித்தையேயாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ரணிலுக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சந்திரிகாவுக்கும் ஒரே நலன்தான் உண்டு. அதாவது எப்படியும் ஜனாதிபதியாகிவிட வேண்டும் என்பது ரணிலின் எண்ணம். அதே போல் ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கிவிட்டு அதிகாரமுள்ள பிரதமராக ஆட்சியில் தொடரவேண்டும் என்பது சந்திரிகாவின் ஆசை. இந்த இருவரின் ஆசைகளும் பதவியில், ஆட்சியதிகாரத்தில் இருப்பதேயாகும். இதற்குத் தமிழ் மக்களைப் பயன்படுத்த வேண்டும்.

தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்க வேண்டும் என்று இவ்விரு கட்சிகளுக்கும் துளிகூட அக்கறையுமில்லை, எண்ணமுமில்லை. முழுமையான இணைப்பாட்சித் திட்டத்துக்கு இவ்விரு கட்சிகளும் தயாரில்லை. இந்த நிலையில் தமிழ் மக்கள் விட்டுக் கொடுப்புடனும், நெகிழ்வுப் போக்குடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று பல்லவி பாடுகின்றனர்.

தமிழ்மக்கள் சிங்கள மக்களின் மேல் ஆட்சி செலுத்தவா கேட்கிறார்கள். தமிழ் மக்கள் தமது உரிமைகளைத் தமது தாயகத்தில் நிலைநாட்டவே விரும்புகின்றார்கள். தமிழர் தாயகக் கோட்பாட்டை இவ்விரு கட்சிகளும் ஏற்றுக் கொண்டால் பிரச்சினை தீர்வதற்கு இலகுவான வழிபிறக்கும். இதைவிடுத்து தமிழர் தரப்பை விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்ளும்படி கூறுவது நகைப்புக்கிடமானதாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினையை வெறுமனே சிறுபான்மையினரின் பிரச்சினை என்ற வறட்டுத் தனத்தை விட்டு எப்பொழுது இது இரு தேசிய இனங்களின் பிரச்சினை என்று சிங்களம் உணருகின்றதோ அப்பொழுது தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க சிங்களம் தயாராகிவிட்டது என்று கருதமுடியும்.

ஆனால், தற்பொழுது சிங்கள மக்களும் சரி, தமிழ் மக்களும் சரி என்ன நினைக்கிறார்கள். சண்டையா? சமாதானமா? என்று ஒவ்வொருவர் மனதிலும் கேள்வி எழக்கூடிய வகையில் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் அமைந்துள்ளதாக நினைக்கிறார்கள். சிலவேளைகளில் சண்டைக்காகச் சமாதானமா? என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது. ஏனெனில், சமாதானம், சமாதானம் என்று கூறிக் கொண்டு உலக வல்லரசான அமெரிக்க இராணுவ உயரதிகாரிகளின் தமிழ்ப் பகுதிச் சுற்றுலாக்கள், ஒழுங்குபண்ணப்படுவதும், இராணுவ உதவிகளை இந்தியா, அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான் எ[ன்] பவற்றிலிருந்து பெறுவதும் சண்டைக்கான சமாதானமா? என்ற கேள்வியை எழுப்பக் காரணமாகின்றது.

இதைவிடுத்தால் சமாதானத்துக்கான சண்டையா? என்றும் மனதில் எழத்தான் செய்கின்றது. ஏனெனில் சந்திரிகா சமாதானத்துக்காகச் சண்டை என்று கூறிக் கூறி தமிழினத்துக்கு எதிராக நடத்திய போர் அனர்த்தங்களை மக்கள் மறக்கவில்லை. அதனால் சமதானத்துக்கான சண்டை சந்திரிகாவின் தயார்ப்படுத்தலாகவும் இருக்கலாம். எனவே இத்தீவில் சண்டையா? சமாதானமா? என்று ஆட்சியாளர்கள் தீர்மானிக்கப் போகின்றார்கள். தமிழ்மக்கள் தமது உரிமைகளுக்காக எதனையும் இழக்கத் தயாராகிவிட்டனர். தமிழ் மக்கள் எதனையும் விட்டுக் கொடுக்கவும் தயாராகிவிட்டார்கள். ஆனால் தமது உரிமைகளைத் தவிர.

எனவே சிங்கள ஆட்சிபீடம் ச[மா]தான சகவாழ்வா? சதா மோதலா? என்று முடிவுகாண வேண்டிய நிலையில் உள்ளது.

ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. போன்றவற்றைக் கவனத்திலெடுக்காது இருபெரும் சிங்களக் கட்சிகளும் இணைந்து தமிழர்களது உரிமைகளை வழங்க முன்வந்தால் நாடு சுபீட்சமடையும். தவறினால் தமிழ் மக்கள் தமது உரிமைகளை என்ன விலை கொடுத்தும் நிலைநாட்டுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

□□□□

# தென்னை மானியத்தொகை குறைக்கப்படக்கூடிய ஆபத்து

யாழ்.மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டில் தென்னைச் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டமானியத் தொகையின் பகுதிக் கொடுப்பனவுகளை தென்னை அபிவிருத்திச் சபையில் இருந்து பெற்றுக் கொள்வதில் தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் மிகவும் சிரமம் அனுபவிப்பதோடு தமக்கு அனுமதிக்கப்பட்ட மானியத் தொகை குறைக்கப்படுமோ எனவும் அச்சப்படுகின்றனர்.

யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தால் இருநூறு ஏக்கரில் தென்னைச் செய்கையை மேற்கொள்ள மீள் நடுகைக்கு ஒரு ஏக்கருக்கு பதினையாயிரத்து ஐநூறு ரூபாய் வீதமும், புது நடுகைக்கு ரூபா பதினையிரமும் மானிய உதவிகள் வழங்கவென இருநூறு பயனாளிகள் கடந்த வருடத்தில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர் இவர்களுக்கான மானிய உதவு தொகை கட்டம் கட்டமாக மூன்று கட்டங்களில் வழங்கப்பட திட்டமிடப்பட்டிருந்தது. இதன்படி முதல்கட்ட மானிய உதவியாக அறுபத்திநான்கு நல்லின தென்னை நாற்றுக்கள் உள்ளடங்கலாக பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

தென்னை நாற்றுக்களைப் பெற்ற பயனாளிகள் அவற்றை நடுகை செய்த ஒன்பது மாத காலப்பகுதிக்கு முதற்கட்டப் பசளையாக வை.பீ.எம். என்ற பசளையினை இட்டு அதனை தென்னை அபிவிருத்தி அலுவலர் உறுதிப்படுத்திய பின்னரேயே, முதல் கட்ட மானியக் கொடுப்பனவின் மிகுதித் தொகையும் தொடர்ந்து அடுத்த கட்டத் தொகைகளும் வழங்கப்படும் என்பதே இந்த மானிய உதவித் திட்ட நடைமுறையாகும். இதன் அடிப்படையில் கடந்த நவம்பர் மாதம் முதல் நாற்றுக்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது இந்த வை.பி.எம். எனப்படும் பசளை யாழ். மாவட்டத்தில் பிராந்திய தென்னை அபிவிருத்திச் சபையிலோ, கமநல சேவை நிலையங்களிலோ இல்லாதபடியால் தெங்குச் செய்கையில் ஈடுபட்டவர்கள் மிகுந்த சிரமமடை[illegible] களைக் கொள்வனவு செய்து இந்த வை.பி.எம்.பசளையைத் தயார் செய்வதற்கும், உரிய பசளை வகைகளை ஒரே கமநல சேவை நிலையத்தில் பெற முடியாதிருப்பதாக. குறிப்பிட்ட தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.




யாழ்.மாவட்டத்திலள்ள தனியார் விற்பனை நிலையங்களில் இந்த வகைப் பசளைகள் கிடைகக்கூடியதாக இருப்பினும், இங்கு கொள்வனவு செய்துவிட்டு சமர்ப்பிக்கப்படும் பற்றுச் சீட்டுக்களை தென்னை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்களால் ஏற்றுக் கொள்ள முடியாமலிருப்பதாகவும் கூறப்படுகிறது. கமநல சேவை நிலையங்களில் கொள்வனவு செய்து பெறப்படும் பற்றுச் சீட்டுக்களை மட்டுமே தென்னை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

வடபிராந்தியம் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலுள்ள தென்னை அபிவிருத்திச் சபை நிலையங்கள் தென்னைப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான பசளை வகைகள் போதிய அளவில் பெற்று விநியோகம் செய்து வருகையில், வடபிராந்திய அலுவலகம் இந்த வகைப் பசளைகளைப் பெற்று தமக்கு விநியோகிக்க முன்வராதது தம்மைப் பாதிப்படையச் செய்வதோடு, மிகுந்த பிரயாசையின் மத்தியில் யாழ்.மாவட்டத்துக்கு கிள்ளித் தெளிக்கப்பட்ட தென்னைச் செய்கை மானியத் தொகையினையும் தாம் முழுமையாகப் பெற முடியாது போய்விடுமோ என தென்னைச் செய்கையாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

பயனாளிகள் நாற்றுக்களைப் பெற்று ஒன்பது மாத காலப்பகுதிக்குள் முதல் கட்ட மானியத் தொகையினை முழுமையாகப் பெற, உரிய வகையில் செயற்பட்டிருக்க வேண்டும் என்பதும், அவ்வாறில்லையெனில் அவர்களது மானியத்தொகை குறைக்கப்படும் நிலை ஏற்படக்கூடும் எனவும் தென்னை அபிவிருத்திச் சபையில் இருந்து அறியமுடிகிறது. (31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கின் நஜாவ் நகரில் நேற்றும் சண்டை நடந்தது!



ஈரக்கின் நஜாவ் நகரிலுள்ள இமாம் அலி பள்ளிவாசலில் தங்கியுள்ள சதார் ஆதரவுப் படையினருக்கும், அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகளுக்குமிடையே கடும்மோதல் இடம்பெற்றுள்ளது. அல் சதாரின் படைப்பிரிவினர் அமெரிக்கப் படையினரின் தாங்கியொன்றைத் தாக்கியபின்னரே, இந்த மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலையடுத்து அமெரிக்க ஜெட் விமானங்கள் இமாம் - அலி பள்ளிவாசலைச் சூழவுள்ள பகுதிகளில் பத்திற்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியுள்ளன. இந்தத் தாக்குதல்களில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தொடர்பாக எவ்வித தகவலும் வெளிவரவில்லையென செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை ஈராக்கிலுள்ள ஷியா முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க இராணுவத்தினருக்கு ஈராக்கிய இடைக்கால அரசு ஒத்துழைப்பு வழங்கிவருவதனால், அது ஈராக் மக்களிடையே ஆதரவை இழந்துவருவதாக ஈரான் ஜனாதிபதி முகமட் கதாமி தெரிவித்தார்.

நஜாவ்வில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் நியாயமற்றதெனத் தெரிவித்த அவர், முதலில் பலூஜாவைத் தாக்கிய இராணுவம் தற்போது நஜாவ்வைத் தாக்கிவருகின்றது. இவ்வாறு ஈராக் முழுவதையும் அமெரிக்கா தாக்கும் திட்டத்தை மேற்கொண்டுவருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# வெளிநாட்டவர் தங்குவதற்கு சீனா அனுமதி வழங்குகிறது!



வெளிநாட்டவர்களின் நடமாட்டத்துக்குக் கடும் கட்டுப்பாடுகளை விதித்திருந்த சீனா, இப்போது அதைத தளர்த்திக்கொண்டுள்ளது. சீனாவைச் சுற்றிப்பார்ப்பதற்கும், படிப்பதற்கும், தொழில் செய்வதற்கும் என அங்கு செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது.

3 ஆயிரம் வெளிநாட்டவருக்கு நிரந்தர வாசத்துக்கான அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அனுமதி 10 ஆண்டுகளுககுச் செல்லத்தகது ஆகும். இதைப்பெற்ற வெளிநாட்டவர் எந்த இடத்தில் வேண்டுமானாலும் தங்கலாம், வேலை செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் பயணிகள் விமானம் வெற்றிகரமாகப் பரீட்சிப்பு!

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் பயணிகள் விமானமான சாரஸ் நேற்றுமுன்தினம் வெற்றிகரமாகப் பரீட்சார்த்தப் பறப்பில் ஈடுபட்டது.

பெங்களூரில் அமைந்துள்ள தேசிய விமான ஆராய்ச்சி நிறுவனமே இதனைத் தயாரித்துள்ளது. இதன் பரீட்சார்த்தப் பறப்பினை இந்திய மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் கபில்சிபல், இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத் தலைவர் மொகந்தி ஆகியோர் நேரில் பார்வையிட்டனர்.

சுமார் 20 நிமிடங்கள் பரீட்சார்த்தப் பறப்பை வெற்றிகரமாக மேற்கொண்ட இந்த விமானம் - எந்தவித சிக்கலுமின்றிப் பத்திரமாகத் தரையிறங்கியது.

14 பேர் அமர்ந்து செல்லக்கூடிய இந்த விமானம் மணிக்கு 620 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கக்கூடியது. 7500 அடி உயரத்தில் பறக்கும் வல்லமைகொண்ட இந்த விமானம், மிகச் சிறிய விமான ஓடு பாதைகள் மற்றும் மோசமான விமான ஓடுபாதைகள் போன்றவற்றிலும் மேலெழும்பவோ, தரையிறங்கவோ கூடியது.

15 மீற்றர் நீளம், 14.7 மீற்றர் அகலம், 5.2 மீற்றர் உயரங்கொண்ட இந்த விமானம், 570 மீற்றர் நீளமான விமான ஓடுபாதையில் மேலெழும்பக் கூடிய திறனைக்கொண்டது. தரையிறங்க 605 மீற்றர் நீள ஓடுபாதை போதுமானது.

எவ்வாறான காலநிலையிலும் பறக்கும் இந்த விமானம், இந்திய எயார் அம்புலன்ஸ், புலனாய்வுப் பணிகள் போன்ற செயற்பாடுகளுக்கும் இதனைப் பயன்படுத்தமுடியும்.

# பங்களாதேஷில் நேற்றும் வன்முறைகள் தொடர்ந்தன



பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பையடுத்து, அங்கு பரவலாக வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன.

இந்த வன்முறைச் சம்பவங்களையடுத்து - நேற்று பாடசாலைகள, அரச திணைக்களங்கள் எதுவும் இயங்கவில்லை. இதேவேளை, எதிரகட்சி ஆதரவாளர்கள் பங்களாதேஷின் பல பகுதிகளிலும் பஸ் மற்றும் ரயில் வண்டிகளுக்குத தீ வைத்ததில் அங்கு போக்குவரத்து எதுவும் நடைபெறவில்லை.

தலைநகர் டாக்காவிலிருந்து சிட்டஹொங் சென்ற பயணிகள் ரயில் மீது எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் தீவைத்தனர். இவ்வாறு ரயிலுக்குத் தீவைத்த குழுவினரைப் பொலிஸார் விரட்டியடித்தவேளை பொலிஸாருக்கும் - கலகக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனையடுத்து வன்முறைக் குழுவினரைக் கலைக்கப் பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்.

அத்துடன் அவாமி லீக் கட்சி அலுவலகம் அருகிலும், தலைநகர் டாக்காவிலுள்ள மத்திய சிறைக்கருகிலும் இருந்து இரண்டு குண்டுகளை பொலிஸார் கைப்பற்றினர்.

கடையடைப்பு நடத்தும் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் - நாளையும் முழுநாள் கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர். அத்துடன் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று பிரதமர் காலிதா ஷியா பதவிவிலக வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, குண்டுவெடிப்பினால் எதிர்கட்சித் தலைவர் ஷேக் கசீனாவிற்குச் சிறிய காயமேற்பட்டுள்ளதாகவும், அவரது செவிப்பறை வெடித்துவிட்டதாகவும் அவரைப் பரிசோதித்த மூன்றுபேர் அடங்கிய வைத்தியர்கள் தெரிவித்தனர்.

தற்போது வீட்டில் ஓய்வெடுத்துவரும் ஷேக் கசீனாவை - பங்களாதேஷுக்கான அமெரிக்கத் தூதுவர் ஹரி தோமஸ் சென்று பார்வையிட்டார். குண்டுவெடிப்பில் பலர் உயிரிழந்தமையிட்டு அமெரிக்கா அதிர்ச்சியடைநதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பத்து அல்கொய்டா உறுப்பினர்கள் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டனர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் சுதந்திர தினத்திற்கு முதல்நாள் பாகிஸ்தானின் நாடாளுமன்ற கட்டடத் தொகுதி மற்றும், இராணுவத் தலைமையகம் என்பவற்றைத் தாக்கி அழிக்கத் திட்டமிட்டார்கள் என்ற சந்தேகத்தில், அல்கொய்டா அமைப்பின் உறுப்பினர்கள் எனக் கருதப்படும் பத்துப்பேரைப் பாகிஸ்தான் படையினர் நேற்றுக் கைதுசெய்தனர்.

இந்தக் கைதுச் சம்பவங்கள் தொடர்பாகப் பாகிஸ்தானின் ஊடகத்துறை அமைச்சர் ஷேக் ரஷீத் தெரிவித்ததாவது -

பாகிஸ்தானின் சுதநதிரதின விழா கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றது. அன்றைய தினம் பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் மற்றும் ராவல்பிண்டி நகர்களிலுள்ள ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் இல்லம், நாடாளுமன்றக் கட்டடம், அமெரிக்கத் தூதரகம் மற்றும் பாகிஸ்தானின் இராணுவத் தலைமையகம் என்பவற்றின் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்கு இவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

இதுகுறித்து பாகிஸ்தானின் புலனாய்வுத்துறைக்குத் தகவல் கிடைத்தது. அவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சோதனை நடத்தி, 10 அல்கொய்டா தீவிரவாதிகளைச் கைதுசெய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இருவர் எகிப்து நாட்டைச் சேர்ந்தவர்கள். எகிப்து நாட்டைச் சேர்ந்த - கோரி இஸ்மாயில் மற்றும் ஷேக் எஸ்கா என்ற இருவருமே இந்தத் தாக்குதல் திட்டத்தைத் தீட்டியிருந்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து ரொக்கட்டுக்கள், வெடிகுண்டுகள் மற்றும் பல நவீன ஆயுதங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. இவர்களின் திட்டத்தின்படி தாக்குதல்கள் நடந்திருந்தால் நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்திருப்பர்.

அத்துடன் சுதந்திரதினம் தொடங்கி ஒருவார காலத்திற்கு பாகிஸ்தானின் தொடர்தாக்குதல்களை நடத்தவும் திட்டமிட்டிருந்தனர்.

இதேவேளை இந்தத் திட்டத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மேலும் மூன்று அல்லது நான்கு பேர் தலைமறைவாகியுள்ளனர். அவர்களையும் பொலிஸார் தேடிவருகின்றனர்.

இஸ்லாமாபாத்திலுள்ள மத பாடசாலையொன்றின் தலைவரும், மத குருவுமான அப்துல் ரஷீத் காஜி என்பவருக்கும் இந்தச் சதித்திட்டத்தில் தொடர்புள்ளது.

அவரது வாகனங்கள் இந்தத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்படவிருந்தன. தற்போது அந்த மதகுருவும் தலைமறைவாகிவிட்டார். அவரையும் பொலிஸார் தேடிவருவதாகவும் தெரிவித்தார்.




சர்ச்சைக்குரிய

# பாகிஸ்தான் மதத் தலைவருக்கு நோர்வே செல்வதற்கு அனுமதி!

பாகிஸ்தானின் சர்ச்சைக்குரிய இஸ்லாமிய மதத் தலைவரான குவாசி ஹுசைனுக்கு நோர்வே செல்வதற்கு அந்நாடு அனுமதி வழங்கியுள்ளது. அல்கொய்டா அமைப்பின் தலைவரான ஒஸாமா பின்லேடனின் ஆதரவாளர் எனக் கருதப்படும் குவாசி ஹுசைனுக்கு நோர்வேயின் மாநகர விவகாரங்களுக்கான அமைச்சர் எர்னா சொல்பேக் இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு தலிபான் அமைப்பிற்கு தாம் ஆதரவளித்து வந்ததாக பாகிஸ்தானின் ஜமாதி இஸ்லாமிய கட்சியின் தலைவர் குவாசி ஹுசைன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். வணிகர் கழகம் நடாத்தும்

யாழ். வர்த்தகக் கண்காட்சி 2004

ஆகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை
யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும் பங்குபற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். இந்தக் கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள், கல்வி அறிவியல் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வம் உள்ளோர் அனைவரையும் இதில் பங்குபற்றி பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

(C/2937) யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




## ஒலிம்பிக் பதக்க விபரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 23 | 25 | 17 | 65 |
| சீனா | 23 | 15 | 12 | 50 |
| ஜப்பான் | 15 | 8 | 8 | 31 |
| அவுஸ்ரேலியா | 13 | 9 | 13 | 35 |
| பிரான்ஸ் | 9 | 7 | 9 | 25 |
| ஜேர்மனி | 8 | 10 | 11 | 29 |
| உக்ரெயின் | 8 | 2 | 5 | 15 |
| பிரிட்டன் | 7 | 8 | 7 | 22 |
| இத்தாலி | 7 | 6 | 7 | 20 |
| ருமேனியா | 7 | 3 | 4 | 14 |
| ரஷ்யா | 6 | 15 | 18 | 39 |
| கொரியா | 6 | 10 | 5 | 21 |
| கிறீஸ் | 5 | 2 | 2 | 9 |
| நெதர்லாந்து | 3 | 6 | 8 | 17 |
| ஹங்கேரி | 3 | 4 | 1 | 8 |
| சுவீடன் | 3 | 0 | 1 | 4 |
| துருக்கி | 3 | 1 | 1 | 4 |
| பெலாரஸ் | 2 | 3 | 6 | 11 |
| போலந்து | 2 | 2 | 3 | 7 |
| ஸ்லோவாக்கியா | 2 | 2 | 1 | 5 |
| ஜோர்ஜியா | 2 | 1 | 0 | 3 |
| தாய்லாந்து | 2 | 0 | 2 | 4 |
| நோர்வே | 2 | 0 | 0 | 2 |
| நியூஸிலாந்து | 2 | 0 | 0 | 2 |
| ஸ்பெயின் | 1 | 6 | 2 | 9 |
| கனடா | 1 | 3 | 1 | 5 |
| கியூபா | 1 | 1 | 6 | 8 |
| பல்கேரியா | 1 | 1 | 5 | 7 |
| இந்தோனேஷியா | 1 | 1 | 2 | 4 |
| தென்னாபிரிக்கா | 1 | 1 | 2 | 4 |

# சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க அரசுடன் இணைந்து செயற்பட தயார்!

## ஐ.தே.க அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில தடைபட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக அரசாங்கத்துடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

சமாதான முயற்சிகளின் தற்போதய நிலைதொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் நீண்ட அறிக்கை ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நாடாளுமன்றத்தில் பலமிக்க ஒரே கட்சி என்ற வகையில் அரசாங்கத்தினது சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கிறது.

அரசின் பங்காளியான ஜே.வி.பி விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளதால் - அரசாங்கம் எவ்வாறு சமாதான முயற்சியை முன்னெடுக்கப் போகிறது என்ற கேள்வியை எழுப்புகிறது.

விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சி ஆரம்பிப்பதற்கு முன்னதாக அரசாங்கக் கட்சிகள் தமக்குள் ஒற்றுமைப்படவேண்டும்.

தமது ஆட்சிக்காலத்தில் நிலையான பொருளாதாரத்தை கட்டி எழுப்பியிருந்தும் தற்போதய அரசின் ஆட்சிக்காலத்தில் மிக மோசமான வீழ்ச்சிப் போக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஒஸ்லோவில் உறுதியளிக்கப்பட்ட சர்வதேச நிதியுதவிகள் தற்போது கிடைக்காமல் போகும் நிலை தோன்றி வருவது குறித்தும் அந்த அறிக்கையில் ஐ.தே.க அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

### ஊர்காவலரை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

விடுதலைப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு ஊர்காவற்படையினரையும் விடுதலை செய்யுமாறு கோரி - திருகோணமலையிலுள்ள இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

நேற்றுப் பகல் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கு பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

## சிதம்பரபுரம்...

இதன்பின்னர் இந்த இரண்டு எலும்புக்கூடுகளையும் மீட்ட பொலிஸார் வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இந்த இரு எலும்புக் கூடுகளையும் இரசாயனப் பகுப்பாய்விற்கு கொழும்பிற்கு அனுப்பி பூரண பகுப்பாய்வு அறிக்கையினைப் பெறுமாறு மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, அண்மையில் சிதம்பரபுரம் பகுதியிலுள்ள நல்புரி நிலையத்திலிருந்து காணாமற்போன பெண்ணின் எலும்புக் கூடாக இது இருக்கலாமென நலன்புரி நிலைய மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் மீட்கப்பட்ட எலும்புக்கூடொன்றின் தலையில் காயம் இருப்பதற்கான அடையாளம் தென்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் இந்த எலும்புக் கூடுகளை கொழும்பிற்கு இரசாயனப் பகுப்பாய்விற்கு அனுப்பி அங்கிருந்து வரும் தகவல்களின் அடிப்படையிலேயே உண்மையான விபரங்களை வெளியிட முடியுமென வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

(03)

## தமிழ்ச்செல்வனுடன்...

உடனடியாக நிறுத்தவேண்டும் என விடுதலைப் புலிகள் இந்தச் சந்திப்பின்போது, வலியுறுத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருகோணமலை துறைமுகத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் விடுதலைப் புலிகள் புதிய முகாம்களை அமைத்துவருவதாக கடற்படையினர் செய்துள்ள முறைப்பாடு குறித்தும் கண்காணிப்புக்குழுவின் தலைவர் தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை நடத்துவார் என்றும் கூறப்படுகிறது.

இத்துடன், முல்லைத்தீவில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை இறக்கியதாக கடற்படையினர் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்தும் ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(01)

## பிரதிப் பாதுகாப்பு...

கொழும்பில் படுகொலைகள் நடைபெறுகின்றன இது போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு நன்மையான விடயமாக இருக்கமாட்டாது. யுத்தம் நிறுத்தப்பட்டுள்ள தற்போதைய சூழலிலும் கொலைகள் தொடர்கின்றன. இதனால் விடுதலைப் புலிகள் எவ்வளவு தூரம் யுத்தநிறுத்தத்தை நேர்மையான முறையில் கடைப்பிடிக்கின்றார்கள் என்பதனைக் கேட்க வேண்டியுள்ளது. இதனையே பொது மக்களும் எம்மிடம் கேட்கின்றனர்.

போர் நிறுத்த ஒப்பந்தம் சமாதானம் எட்டப்படும் வரை இருக்க வேண்டுமென்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். இதற்காக இரு தரப்பினருக்குமிடையில் நிபந்தனையற்ற பேச்சுக்கள் ஆரம்பமாக வேண்டும்.

கொழும்பில் இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களுக்கு விடுதலைப் புலிகள் மீதே குற்றம் சுமத்தப்படுகிறது. இந்த நிலையில் போர் நிறுத்த உடன்படிக்கையைப் பாதுகாக்க விடுதலைப் புலிகள் நேர்மையான முயற்சியில் ஈடுபடுவதாக தெரிவிப்பதில் பிரச்சினைகள் உள்ளன.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை கண்காணிக்கும் குழுவிற்கு யுத்த நிறுத்த மீறல்கள் குறித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க அதிகாரமுள்ளது. அதனை அவர்கள் செய்யாது விட்டால் இது தொடர்பாக நாம் மாற்று வழியாக என்ன செய்யலாம் என்பது குறித்து ஆராயும் நிலை ஏற்படும். இது தொடர்பாக தற்போது நாம் ஆராய்ந்து வருகிறோம் எனத் தெரிவித்தார்.

இதன் பின்னர் ஓமந்தைப் பகுதியிலுள்ள இராணுவ முகாமிற்கு விஜயம் செய்த அமைச்சர் அப்பகுதியிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

பின்னர் இராணுவ ஹெலிகொப்ரர் மூலம் மன்னார் தள்ளாடி இராணுவ முகாமுக்கு சென்ற அமைச்சர் அங்கு முகாமின் நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் படையதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

வவுனியாவில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் நடத்திய கலந்துரையாடலில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, வவுனியா பிராந்திய இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய மற்றும் சிரேஷ்ட படையதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(01,தே)

# தாய்மடியில் தாலாட்டு ஒலிப்பேழை வெளியீடு

தமிழீழ விடியல் இசைக்குழுவின் தாய் மடியின் தாலாட்டு ஒலிப்பேழை வெளியீட்டு விழா நேற்று மாலை 4 மணிக்கு பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், இமையவன் யாழ். பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் செழியன், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார் மற்றும் கப்டன் காளிக்குட்டி, லெப். கண்ணன் ஆகிய மாவீரர்களின் தாயார் சதாதேவி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக்கொடியை நல்லூர் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூமகள் ஏற்றினார். தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது. இதையடுத்து தலைமையுரையினை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் பகீரதன் நிகழ்த்தினார்.

சிறப்புரையை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஆற்றினார்.

தொடர்ந்து வெளியீட்டுரையை யாழ்மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நிகழ்த்தினார்.

அடுத்து ஒலிப்பேழை வெளியீட்டு வைபவம் இடம்பெற்றது. பேராசிரியர் க.கந்தசாமி ஒலிப்பேழையை வெளியிட்டு வைக்க அதனை துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து மதிப்பீட்டுரையை எழுத்தாளர் எஸ்.யோகநாதன் நிகழ்த்தினார். ஏற்புரையை பாடலாசிரியர் செங்கதிர் நிகழ்த்தினார். தொடர்ந்து இசை நிகழ்வும் இடம்பெற்றது.

## காயங்கேணி...

வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

ஒருவார காலப்பகுதிக்குள் காயங்கேணிப் பகுதியில் இடம்பெற்ற மூன்றாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும். ஏற்கனவே நடந்த இரண்டு தாக்குதல்களில் இருவர் உயிரிழந்ததுடன் இரு படையினர் காயமடைந்தது குறிப்பிடத்தக்கது.

## யாழ்.மாவட்ட...

சங்கத்தினர், நியமனக் கடிதங்களை ஏனைய வேலையற்ற பட்டதாரிகளும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் ஒரே தடவையில் எல்லோருக்கும் வழங்குமாறு கோரியிருந்தனர்.

எனினும் முதற்கட்டத் தெரிவில் இடம்பெற்ற பெயர்களுக்குரிய அனைவருக்குமான நியமனக்கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக நிதி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். இதனடிப்படையில் நியமனக் கடிதங்கள் வரத்தொடங்கியுள்ளன.

# ஆயுதக் குழுக்களுக்கு...

பாவாவும் யோகாவும் இந்தச் சம்பவத்தில் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

• பெண் போராளி ஒருவர் காயமடைந்தார். குயிலின்பன் காயமின்றி தப்பிக்கொண்டார்.

இந்தத் தாக்குதலை நடத்திய மூவர் குண்டுவெடிப்பை அடுத்து அந்தப் பகுதியிலிருந்து தப்பியோடினர்.

இவர்கள் உடனடியக இராணுவ சோதனைச்சாவடியில் இன்னொரு மோட்டார் சைக்கிளை மறித்து மேற்படி தாக்குதலை நடத்திய நபர்கள் அதில் சென்றவரின் ஹெல்மெட்டை கழற்றுமாறு கூறி சோதனையிட்டதுடன் அடையாள அட்டையையும் பரிசோதித்துள்ளனர்.

மேற்படி நபர் தாம் தேடும் நபர் அல்ல என தெரிந்ததும் அவரைத் தொடர்ந்து செல்ல அனுமதித்தனர்.

இராணுவ சோதனைச் சாவடியில் தமது பெயர்களைப் பதிவு செய்துவிட்டுச் சென்ற புலிகள் மீது சரியாக இலக்குவைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இராணுவச் சோதனைச் சாவடியிலிருந்து 15 மீற்றர் தொலைவில் - இரண்டு இராணுவ நிலைகளுக்கிடையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் நடந்த இடத்தில் இருந்த குயிலின்பனின் தகவல்படி புலிகள் தொடர்பான விபரங்களை தாக்குதல் நடத்திய நபர்கள் இராணுவத்தினிடந்து பெற்றுள்ளனர் எனச் சந்தேகம் எழுநதுள்ளது.

காயம் இன்றித் தப்பிய பெண் போராளியின் தகவலின்படி, சோதனைச் சாவடியைக் கடந்துசென்ற போது, படையினர் கைகொட்டிச் சிரித்து ஏளனம் செய்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் இரண்டு இராணுவ நிலைகளுக்கிடையில் நன்கு திட்டமிட்ட முறையிலேயே இடம்பெற்றிருக்கிறது.

இந்தத் தாக்குதலுக்கான கிளைமோர் பொருத்தமான இடத்தில் வைபதற்கும் - தாக்குலுக்காக பதுங்கியிருக்கவும், இன்னொரு மோட்டார் சைக்கிளை சோதனையிட்டும், புலிகள்தான் என உறுதிசெய்த பிறகும்- குறித்த தருணத்தில் கிளைமோரை வெடிக்க வைக்கவும் இராணுவம் உதவியுள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

நம்பிக்கைக்குத் துரோகமான முறையில் இராணுவத்தினர் இப்படி நடந்துகொண்டது இதுதான் முதற் தடவை அல்ல.

இத்தகைய சம்பவங்கள் போர் நிறுத்த உடன்பாட்டுக்கும் சமாதான முயற்சிக்கும் பாதகம் விளைவிக்கும்.

இந்த நெருக்கடியான நிலை குறித்து ஏற்கனவே உங்களின் கவனத்துக்கு கொண்டு வரத் தயாராக இருக்கிறோம்.

போர் நிறுத்த உடன்பாட்டின் 1.8 பிரிவை உரிய முறையில் அமுல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியிருக்கிறோம்.

போர் நிறுத்த உடன்பாட்டில் 1.8 பிரிவுக்கு முரணாக - இராணுவம் ஆயுதக்குழுக்களுக்கு புகலிடம் கொடுத்து வன்முறைகளுக்குக் காரணமாக படைத்தரப்பினர் அந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள், இயல்பு நிலைக்கும், போர் நிறுத்த உடன்பாட்டுக்கும் பாரிய அச்சுறுத்தலாக உருவெடுத்திருக்கிறது.

பல்வேறு ஆயுதக் குழுக்களுக்கும் இராணுவப் புலனாய்வுத்துறை ஊக்குவித்து ஆதரித்து வருவதுவாகரைத் தாக்குதல் சம்பவத்துக்கு இராணுவமும் இராணுவப் புலனாய்வுத்துறையும் காரணம் என்று நேரடியாகவே குற்றஞ்சாட்டுகிறோம் என்றும் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் [illegible] தமிழ்ச்செல்வன் [illegible] குறிப்பிட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு
### (அரசன் மாஸ்ரர்)

இரும்பு மதவடி, வதிரியை வசிப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு அவர்கள் 23.08.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பதியினரின் புதல்வனும், திருமதி தனலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கணேசகுமாரன், கிருஷ்ணகுமாரன் (கனடா), சச்சிதானந்தகுமாரன் (கனடா) குகக்குமாரன் (ஈழக்குமரன் உணவக உரிமையாளர், முறிகண்டி), மனோ (கனடா), சிவலட்சுமி (கனடா), மகாலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், க.உமா (இந்தியா), மைனா (கனடா), ச.உமா (கனடா), ராதா (கனடா), நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.08.2004 இன்று காலை 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இரும்பு மதவடி,
வதிரி, கரவெட்டி

தகவல்
(சி-2995) சி.குகக்குமாரன் (குகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.